புதுக்கோட்டை ஸமஸ்தான
தேசிய யுத்த முன்னணி நிலயம்.

பிரசுரம்] 1944-ம் ஞு நவம்பர் மீ 18உ [ந. 224

தேசிய யுத்த முன்னணி விஷயங்களைப் பற்றிய கட்டுரைகளை பத்திராதிபர் அன்புடன் வரவேற்கிறார். அக்கட்டுரைகள், தகுதியுள்ளவைகளாக இருக்கும் பக்ஷத்தில், கட்டுரை ஆசிரியரின் பெயருடன் வெளியிடப்படும். கட்டுரைகள் சுருக்கமாக இருக்கவேண்டும்; ஒரு வாரத்திற்கு முன்னதாகவே அனுப்பவேண்டும்.

யுத்தத்துக்குப்பின் உலக சீர்திருத்தம்.

—*17-ம் பக்கம் பார்க்க.*

பிரஸங்கம் CCXXIV.

நேசதேசத்தார்கள் ஏல்லாக் கடல்களிலும் ஆதிக்கம் பெற்றுவிட்டார்கள்.

ஜெர்மன் கடற்படைக்கு பலமான அடிகள்.

(பிரயான் டான்ஸ்டால், பிரிடிஷ் ஒலிபரப்பின் கடற்படை நிருபர்).

பிலிப்பைன்ஸ் சமுத்திரங்களில் ஜப்பானியக் கடற்படை பூராவையும் எதிர்த்து அமெரிக்காவின் பஸிபிக் கடற்படையின் இரு பகுதிகள் வெற்றிபெற்றது தான் சமீப காலத்திய கடற்படை நடவடிக்கைகளில் முக்கியத்துவமுள்ளவை. யுத்தத்துக்குச் சாதகம் என்ற முறையில் இது மகத்தான நிகழ்ச்சியாகும். எதிரிக்கு இரண்டு யுத்தக் கப்பல்களும், நான்கு விமானம் தாங்கிக் கப்பல்களும், ஆறு கனமான சஞ்சாரிகளும், மற்ற பன்னிரண்டு கப்பல்களும் மூழ்கடிக்கப்பட்டன. யுத்த தந்திர முறையிலும் இது முக்கியத்துவமுள்ளது. ஏனெனில் பிலிப்பைன்ஸை விடுவிக்கும் மாக் ஆர்தரின் முயற்சி தடங்கலன்னியில் நடைபெறக் கூடும். ஜப்பானியரின் முக்கியமான கடற்படையும் அதன் வலிமையை மறுபடியும் பெற்றுவிட முடியாது. எந்நிலைமையிலும் சிறிதுகாலம் வரையில் அது வேலைசெய்ய முடியாது.

இவ்விதமாக பிலிப்பைன்ஸை விடுவிக்க முயலும் மாக் ஆர்தரை வழிமறித்துத் தாக்குவது என்ற முயற்சியில் ஜப்பானியக் கடற்படை இகழ்ச்சி பெற்றதுடன் பலமான நஷ்டத்தையும் அடைந்துவிட்டது. மேலும் படைகள் இறங்கியபின் அநேக நாட்களுக்குப் பின்தான் ஜப்பான் குறுக்கிடமுயன்றது. ஆகிலும் ஜப்பானின் மூன்று முகமான தாக்குதல் துணிவுகரமாக ஆரம்பிக்கப்பட்டது. மாக் ஆர்தரின் ஸ்தானங்களுக்கு அதிக அபாயத்தை உண்டு பண்ணின. கடலில் வெகுதூரம் தாண்டி எதிரிப் படையை இவ்வளவு பரிஷ்காரமாக முறியடித்ததற்கு அமெரிக்கக் கடற்படை இலாகாவுக்கு புகழுரை உரித்ததாகும்.

பிலிப்பைன்ஸில் மற்றொரு கடற்படையின் கப்பல்களும் போர்புரிந்து வருகின்றன. ஆஸ்திரேலியாவைச் சேர்ந்த சஞ்சாரிக் கப்பல் படையும் இந்தக் கடல் போரில் பங்கெடுத்துக் கொண்டது. ஆஸ்திரேலிய கடற்படைதான் நியூகினியாவின் வடக்குக் கடற்கரை ஓரமாக மாக் ஆர்தரின் படைகள் இறங்கியதற்கு வெகுவாகச் சாதகம் அளித்துவந்தன. மேலும் அது ஆஸ்திரேலிய தளங்களிலிருந்து சாமான்களை ஏற்றிச்சென்ற கப்பல்களுக்கும் துணைக் காவல் புரிந்துவந்தன.

டிர்பிட்ஸுக்கு மறுபடியும் ஆபத்து.

ஐரோப்பிய சமுத்திரங்களில் பிரிடிஷ் விமானப்படை டிராமோசோவிக்கருகில் நங்கூரம் பாய்ச்சி நின்ற டிர்பிட்ஸ் என்னும் ஜெர்மன் கப்பலின்பேரில் குண்டுகளை வீசிற்று. அந்தக் கப்பல் நார்வேயின் தூர வடக்கிலிருந்தும், பின்லாந்திலிருந்தும் நார்வேக்குள் நுழைந்துவரும், ருஷ்யப்படைகள் வசம் அகப்பட்டுக்கொள்ளாமல் தப்பிஓட நார்வேக் கடற்கரை ஓரமாகச் சென்று வழியில் அங்கு தங்கி நின்றது. டிர்பிட்ஸின் எஞ்ஜின்கள் வேலை செய்யாததால் அது இழுத்துச் செல்லப்படுகிறது. அது பெரிய கப்பலானதால் அதிக சிரம மேற்படுகிறது. அதை மூழ்கடிப்பதும் சிரம சாத்தியமானது. அது பிஸ்மார்க் வகுப்பைச் சேர்ந்தது. அதன் தட்டுகள் பனுமாக் கால்வாயின் குறுக்கே செல்லக்கூடாதவண்ணம் விசாலமாக இருக்கின்றன. கால்வாயின் அமைப்புகள் 110-அடி அகலமுள்ளவையாகையால் பிரிடிஷ் அமெரிக்கக் கப்பல்கள் அதை அனுசரித்து கட்டப்பட்டிருந்தன. யுத்தத்தில் கால்வாயைத் தாண்ட சந்தர்ப்பம் ஏற்படாதென்று அறிந்த ஜெர்மானியர்கள் கப்பலின் பக்கவாட்டு கவசங்களையும், தண்ணீருக்குள்ள ரக்ஷணைகளையும் பலமாக அமைத்துவிட்டதால் அது பிரிடிஷ் அமெரிக்க ரகங்களைக்காட்டிலும் பெரியதாக அமைக்கப்பட்டது.

பெர்கனுக்குத் தெற்கில் பிரிடிஷ் விமானங்கள் புதிதாகக் கட்டப்படும் ஜெர்மன் யூ-படகுத் தளங்களை வெற்றிகரமாகத் தாக்கின. பிரெஞ்சு அட்லாண்டிக் கடற்கரையின் ஆதிக்கத்தை ஜெர்மனி இழந்தபின் ஜெர்மனி வடக்குக் கடல் வழியாகத்தான் யூ-படகுகளை அட்லாண்டிக் கடலுக்கும், வடக்குக் கடலுக்கும் கொண்டுபோகிறது. யூ-படகுகளின் நிலைமையை உத்தேசிக்கும்பொழுது நார்வேயை ஆக்கிரமித்து பிரான்ஸ் விழுமுன் 1940-ம் வருஷம் வஸந்த காலத்திலிருந்த நிலைமை அவைகளுக்கு ஏற்பட்டுவிட்டது என்று நினைக்கவேண்டும். மற்ற எல்லா அம்சங்களிலும் அவைகளின் நிலைமை இப்பொழுது எப்பொழுதுமிருந்ததைவிட மோசமாக இருக்கிறது. இதற்குக் காரணம் அவைகளை வேட்டையாடும் யுத்தக்கப்பல்கள், விமானப் படையின் ரகங்களும், சக்தியும் அதிகரித்துவிட்டன.

பிரிடிஷ் கடற்படை அநேகம் தடவை தாக்கியிருக்கிறது. இந்த நடவடிக்கைகளுடன் பிரிடனின் கடற்கரைப் படையும் சமீப காலத்தில் நார்வே கடற்கரைக்கருகில் ஜெர்மன் கப்பல்களைத் தாக்கியிருக்கின்றன. யுத்தக் கப்பல்களின் துணைகொண்ட விமானந்தாங்கிகளில் செல்லும் விமானப்படை ஜெர்மனியின் மூன்று சர்பராக் கப்பல்களையும், ஒரு எண்ணெய்க் கப்பலையும், ஒரு. விமானந்தாங்கிக் கப்பலையும், இரண்டு கடற்படை உதவிக் கப்பல்களையும், ஒரு போர்க் கப்பலையும் மூழ்கடித்திருக்கின்றன. ஒரு பெரிய யூ-படகு பழுதாக்கப்பட்டுக் கடற்கரைக்குச் சென்றது. பீரங்கிப் பிரயோகத்தினால் மற்றும் 19 கப்பல்கள் பழுதுபடுத்தப் பட்டன. கவசம் பூண்ட கடற்கரை ஓரமாகச் செல்லும் கப்பலும் இழுப்புக் கப்பலும் கடற்கரையில் தங்கும்படி நேரிட்டது.

இதே சமயத்தில் பகட்டன்னியில் பிரிடிஷ் கடற்படை பிரெஞ்சு கடற்கரையிலுள்ள துறைமுகங்களையும், பெல்ஜியன் கடற்கரையிலுள்ள துறைமுகங்களையும் சுத்திசெய்து வருகிறது. நேசதேசப் படைகளும், விமானங்களும் நார்மண்டி கடற்கரையில் சிருஷ்டனை செய்யப்பட்ட துறைமுகங்களின் வட்டாரத்தைத் தாண்டி வெகுதூரம் சென்றுவிட்டதால் அவைகளுக்கு சர்பராக்களை அனுப்ப இந்தத் துறைமுகங்கள் அவசியமானவை. இந்த வேலையில் வட ஆபிரிக்காவிலும், ஸிஸிலியிலும் பழுதுபட்ட துறைமுகங்களை புனருத்தாரணம் செய்த அனுபவம் உபயோகமுள்ளதாகயிருக்கிறது. ஆகிலும் பிரெஞ்சு பெல்ஜிய துறைமுகங்களுக்குள் நுழையும் மார்க்கம் மிகவும் குறுகலாகயிருப்பதினால் அவைகளை கப்பல்களை மூழ்கடித்தும் மரத்தூண்கள் பேரில் கப்பற் துறைகளைக்காட்டிலும் தடுத்துவிடலாம். மேலும் அவைகளில் பலமான அலை மோதுவதுவும் இருந்துவருகிறது. முட்டுக்கட்டையாக உள்ள கப்பல்களையும், இதர தளவாடங்களையும் அப்புறப்படுத்த நீர்மூழ்கிகளை உபயோகப்படுத்த வேண்டியதாயிற்று. 21 வயதுக்குட்பட்டவர்கள் சகதியிலும், தண்ணீருக்குள் 30-அடி ஆழத்திலும், வேலைசெய்து இடையூறுகளைக் களைந்து எடுப்பதால் அவர்கள் கடற்படைப் போரிலேயே மிகவும் கஷ்டசாத்தியமான, அபாயம் பொருந்திய வேலையைச் செய்து வருகிறார்கள்.

கடைசியாக பிரிடிஷ் கடற்படை கிரிஸ், யூகோஸ்லாவியாவின் விடுதலையிலும், வடக்கு இதாலியிலுள்ள பிரிடிஷ் தரைப்படைகளின் உதவிக்காக ஏட்ரியாடிக் கடற்கரையின் நடவடிக்கையிலும் அது அரிய சேவை செய்துவருகிறது. யுத்த ஆரம்பத்திலேயே மத்தியதரைக் கடலின் கடலாதிக்கம் பிரிடிஷ் கடற்படைக்குக் கிடைத்துவிட்டது. . இந்த ஆதிக்கத்தை இப்பொழுது சிறந்தமுறையில் உபயோகப்படுத்துவதும், ஒதுக்குப்புறமாக உள்ள ஏட்ரியாடிக், ஈஜியன் கடல்களில் நடவடிக்கைகளை மேற்கொள்ளுவதும்தான் அதன் முக்கியமான அலுவல்கள்.

வார யுத்தச் செய்திகள்

(A)-முக்கியமான சம்பவங்கள்.

7—11—44 (செவ்வாய்க்கிழமை).	அமெரிக்க மூன்றாவது படை கிழக்குப் பிரான்ஸில் புதிய தாக்குதலைத் துவக்கிற்று.
	நேசதேசப் படைகள் இதாலியில் மாண்டிகாஸாலூடாவைப் பிடித்தன.
8—11—44 (புதன்கிழமை).	நேசதேசப் படைகள் இதாலியிலுள்ள பார்லியின் வெளிப்புறத்திற்குள் நுழைந்தன.
	அமெரிக்கர்கள் பிரான்ஸில் மெட்ஸ் பகுதியிலுள்ள ஒன்பது உபரி நகரங்களை விடுவித்தார்கள்.
	நேசதேசப் படைகள் வடக்கு பர்மாவிலுள்ள வெண்மைக் கோட்டையைப் பிடித்தன.
9—11—44 (வியாழக்கிழமை).	அமெரிக்க மூன்றாவது படை ஜெர்மன் எல்லைச் சரகத்தை அடைந்தது.
	யூகோஸ்லாவியர்களும், ருஷ்யர்களும் டான்யூப் நதியை மூன்று இடங்களில் தாண்டினார்கள்.
10—11—44 (வெள்ளிக்கிழமை).	மிஸ்டர் சர்ச்சில் பிரான்ஸூக்கு விஜயம் செய்தார்.
11—11—44 (சனிக்கிழமை).	நேசதேசப் படைகள் மெட்ஸூக்கு ஐந்து மைலுக்குள் வந்துவிட்டன.
	8-ம் படை இதாலியிலுள்ள காஞலெனெவோவைத் தாண்டிச் சென்றன.
12—11—44 (ஞாயிற்றுக்கிழமை).	பிரிடிஷ் லங்காஸ்டர் விமானங்கள் ஜெர்மனியின் கடைசி யுத்தக் கப்பலான டிர்பிட்ஸை மூழ்கடித்தன.
13—11—44 (திங்கட்கிழமை).	அமெரிக்கர்கள் கிழக்கு பிரான்ஸிலுள்ள மூன்று மெட்ஸ் கோட்டைகளைப் பிடித்தார்கள்.

(B)-செய்திச் சுருக்கம்.

மேற்குப் போர்முனை.—

கிழக்குப் பிரான்ஸ்.—நவம்பர் 8-ம் தேதியன்று அமெரிக்க 3-வது சேனை மெட்ஸூக்கும் நான்ஸிக்கும் மத்தியில் 25-மைல் நீளத்தில் மெட்ஸை லக்ஷியமாகக் கொண்டு புதிய தாக்குதலை ஆரம்பித்தது. செஸி, மோஸல், நிட் நதிகளையும், சாடே ஸாலின்ஸ் கோட்டையையும் தாண்டிய பின்னும், மெட்ஸிலிருந்து சார்பிரக்கனுக்கும், செர்பர்க்குக்கும் செல்லும் இருப்புப்பாதையைத் துண்டித்தபின்னும் ஜெர்மன் எல்லைச் சரகத்தை அடைந்து மெட்ஸூக்குத் தெற்கில் மூன்று கோட்டைகளைப் பிடித்திருக்கிறார்கள்.

தாக்குதலுக்குப் பின் அநேக இடங்கள் பிடிக்கப்பட்டன. 8-ம் தேதியன்று 13 நகரங்களும், 9-ம் தேதியன்று 9 நகரங்களும், சாடே ஸாலின்ஸ்க்கு வடகிழக்கில் ஹாருடான்ஸ், ரூன், பாண்டனுய், பொளல்லி, ஏகர் கோட்டை, ஆர்ணிக்கோட்டை, மானிக்னி முதலியவைகளும் பிடிபட்டன.

(2) ஹாலந்து.—மாஸ் நதிக்கு மேற்கில் ஏற்பட்ட புதிய தாக்குதலில் பிரிடிஷ் துருப்புகள் வார்டுக் கால்வாயையும், வெஸ்ஸன் கால்வாயையும் தாண்டி பான்ஹீலிலுள்ள நதியின் அடைப்பு கேட்டுகளையும் கைப்பற்றினார்கள். மீஜல் ஆக்கிரமிக்கப்பட்டது.

(3) வால்செர்னுக்கருகில்.—நேசதேசப் படைகள் வ்ரூவன் பொல்டரை விடுவித்தன.

(4) டங்கர்க்.—எதிரி வசமுள்ள துறைமுகங்களில் பாக்கியான டங்கர்க் பேரில் வெடி குண்டுகள் வீசப்பட்டன.

கிழக்குப்போர்முனை.—ருஷ்யப் படைகள் ஹங்கேரியின் தலைநகரமான புடாபெஸ்ட்டைத் தாக்கும் தூரத்திற்குள் வந்துவிட்டார்கள். கீழ்க்கண்ட இடங்கள் பிடிபட்டன. மேசன்

யார்ட், கிளெமெண்டினி, ஜாஸ்லாடானி, உஜர்ஸாஸ், மெகொக்கோ வாசெட், மொனர், டாபியோஸாலா, ஸகியார்கி, பாசாபாடி, நாக்ஸ்காடா.

இதாலி.—பார்லி விடுவிக்கப்பட்டது. அங்கிருந்து முன்னேறி பிரிடிஷ் படைகள் மண்டோன் நதியைத் தாண்டி சாண்டோப்பைப் பிடித்தன. அதற்கு இடது பக்கத்தில் போலிஷ் படைகள் பாக்னேலோவைப் பிடித்தன. கடற்கரைப் பகுதியில் 8-வது சேனை ராவெனுவுக்குத் தெற்கில் கியாயியாக் கால்வாயைத் தாண்டிவிட்டது.

பிலிப்பைன்ஸ் தீவுகள்.—அமெரிக்கப் படைகள் லெயிடித் தீவின் மலைப் பிராந்தியங்களுக்குள் ஊடுருவிச்சென்றுவிட்டன. காரிகாராவுக்குத் தெற்கில் போர் நடைபெறுகிறது. ஆர்மாக்கை நோக்கி முன்னேற்றம் நடைபெறுகிறது. தலைநகரமான மணிலாப்பேரில் வெடிகுண்டுகள் வீசப்பட்டன. ஆர்மாக் விரிகுடாவிற்குள் நுழையமுயன்ற நான்கு போக்குவரத்துக் கப்பல்களும், ஆறு நாசகாரிகளும் கொண்ட ஜப்பானிய கப்பற் கூட்டம் அழிக்கப்பட்டது. அதில் 8,000 துருப்புகள் சென்றன.

அமெரிக்க பறக்கும் கோட்டை விமானங்கள் சைனாவிலுள்ள நாங்கிங்க் பேரிலும், ஜப்பானிலுள்ள கியூஷூப்பேரிலும் வெடிகுண்டுகளைப் போட்டன.

பர்மா.—சீனர்கள் ஐராவதி நதியைத் தாண்டி பாமோவுக்கும், காதாவுக்கும் மத்தியிலுள்ள ஷவேகுலை ஆக்கிரமித்தன. அவர்கள் மிஷித் பிராந்தியத்திலுள்ள டாபிஸ்க் நதியையும் தாண்டி, பர்மா ரஸ்தாவிலுள்ள பாமோவையும் அடைந்துவிட்டார்கள். பாமோ சுற்றி வளைக்கப்பட்டது.

பிரிடிஷ், இந்திய, ஆபிரிக்கப் படைகள் காபா பள்ளத்தாக்கிலுள்ள கலேமியோ பேரில் குண்டுகளை வர்ஷிக்கிறார்கள். இது சின்மலைகளுக்கு வாசற்படி போன்றது. டாமு, டிட்டிம், காலேவாவுக்கும் போகும் ரஸ்தாக்களின் மேலுள்ளது.

சைனா-சீனப்படைகள் க்வாங்க்ஸி மாகாணத்திலுள்ள விமான தளமான லூசௌவை காலி செய்தன.

சத்துருவினுடையவும், சத்துருவினால் ஆக்கிரமிக்கப்பட்டிருக்கும் நாடுகளில் பிரிடிஷ், நேசதேசங்களின் விமானங்களால் ஏற்பட்ட எதிர்ப்புகள்.

5—11—44. (ஞாயிற்றுக்கிழமை).

ஜெர்மனியும், ஐரோப்பாவில் யுத்தம் நடக்கும் பிரதேசங்களும்.

பகல்.—ஜெர்மன் சைனியங்கள்—டன்கர்க் (Dunkirk).

ஜெர்மன் துருப்புகள்.—ஸ்கிமிட் (Schmidt).

எல்டர் நதியிலுள்ள எல்டர் (Elder) பாலம்.

இலக்குகள்.—பிராங்பர்ட் (Frankfurt), கார்ல்ஸ் ருகி (Karls ruhe), லட்விக்ஷாபென் (Ludwigshafen).

எண்ணெய்க் கிணறுகள்.—ஆஸ்திரியா (Austria).

துருப்பு முகாம்கள் ரயில் தளங்கள்.—யூகோஸ்லாவியா (Yugoslavia).

பாலங்கள், ரயில் இலக்குகள்.—பிரென்னர் (Brenner) கணவாய்.

தரைப்படைகள்.—போ (Po) சமவெளி.

கப்பல்கள்.—டால்மேஷியன் துறையிலுள்ள பியூம் (Fiume) துறைமுகம்.

போக்குவரத்துகள்.—ரிவீரா (Riviera), ஆல்பேனியா (Albania).

விமானச்சண்டைகளும், தரைமீதுள்ள விமானங்களும்.—ருஷ்ய யுத்த அரங்கம் முழுவதும்.

தூரக்கிழக்கு (Far East).

கப்பற் கட்டும் துறை ஸ்தலங்கள்.—சிங்கப்பூர் (Singapore).

விமான நிலயங்கள்.—நீக்ராஸ் (Negros), செபு (Cebu).

எண்ணெய்க் கிணறுகள்.—லாகுப் (Lahup).

விமான நிலயங்கள்.—மாண்டோவிலுள்ள ஸிடாஸ் (Sidace).

பர்மா (Burma).

பாலம்.—பாங்ஷெய்க் (Hpaungzeik).

முகாம்கள் எதிரி சைனியங்கள்.—மத்திய பர்மா (Central Burma).

படகுகள், துவியல்கள்.—அக்யாப் (Akyab), கலடான் (Kaladan).

படகுகள் —பாஸ்ஸினுக்கு (Bassein), ஹெஸாடா (Hezada) விற்குமிடையில்.

6—11—44. (திங்கட்கிழமை).

ஜெர்மனியும், ஐரோப்பாவில் யுத்தம் நடக்கும் பிரதேசங்களும்.

ரயில் லயன்கள், பாலங்கள், சேனைகள், யுத்த தளவாடங்கள் தயார் செய்து சேமிப்பு துவியல்கள் ரயில்கள்.-பிரான்ஸ் (France), ஹாலந்து (Holland), ஜெர்மனி (Germany), இவைகளில் யுத்தம் நடக்கும் பிரதேசங்களுக்குப்பின்.

பாலங்கள்.—கோலோனிற்கு (Cologne) அருகில்.

எண்ணெய்க் கிணறுகள்.—கெல்ஸன்கிர்ச்சன் (Gelsenkirchen), ஹாம்பர்க் (Hamburg).

தொழிற்சாலை இலக்குகள்.—ரூர் (Ruhr).
விமான நிலயங்கள்.—ஹாலி (Halle), கிராய்ல்ஸீம் (Crailsheim), ஸாக்ஸென் ஹாஸெனுக்கு அருகில் (Sachsen hausen)
பாலம்.-பிரிட்ஸ்பாருக்கு (Fritzfar) அருகில்
ரயில் தளங்கள்.—டஸ்ஸல்டார்பிற்கருகில் (Dusseldorf).
இலக்குகள்.—ஆஸ்திரியா (Austria), யூகோஸ்லாவியா (Yugoslavia), இதாலி (Italy).
பாலங்கள்.—மாற்றல்கள்—பிரென்னர் (Brenner) கணவாயில் ரயில்வே லயன்கள்.
நெருங்கிய உதவி.—யுத்தம் நடக்கும் பிரதேசங்களிலுள்ள தரைப்படைகள்.
கப்பல்கள்.—எட்ரியாடிக் (Adriatic).
விமானச் சண்டைகள்.—கிழக்கு யுத்த அரங்கம் முழுவதும்.
இரவு.—இலக்குகள்—காப்லென்ஸ் (Coblenz).

தூரக்கிழக்கு (Far East).

விமான நிலயங்கள்.—சேமிப்புகள்—போலி (Boeli) கடல் பிரதேசம்.
ஜப்பானியச் சைனியங்கள்.—லெயிடியிலுள்ள ஆர்மாக் (Ormoc) சமவெளி. (பிலிப்பைன்ஸ்).

பர்மா (Burma).

ஜப்பானியச் சைனியங்கள்.—பாலெட்வா (Paletwa).
படகுகள்.—லோயர் சின்ட்வின் (Lower Chindwin).

7—11—44. (செவ்வாய்க்கிழமை).

ஜெர்மனியும், ஐரோப்பாவில் யுத்தம் நடக்கும் பிரதேசங்களும்.

பகல்.—டார்ட்மண்ட்—எம்ஸ் கால்வாய்—ரூர் (Ruhr).
பீரங்கி ஸ்தாபனங்கள்.—ஸ்கிமிட் (Schmidt).
இலக்குகள்.—கெல்ஸென்கிர்ச்சென் (Gelsenkirchen).
சேனைகள் யுத்த தளவாடங்கள் தயார்செய்து சேமிக்கும் இடங்கள்.—மெசெர்னிக் (Mechernich).
பாலம்.—கொலோனுக்கு (Cologne) அருகில்.
ராணுவக் கட்டடங்கள்.—டன்கர்க் (Dunkirk).
எண்ணெய்ச் சேமிப்புகள்.—எம்மெரிச் (Emmerich).
ரயில்வே லயன்கள்.—டச்சு—ஜெர்மன் (Dutch—German) எல்லை.
கட்டடங்கள், ரயில்வே லயன்கள், பாலங்கள்.-ரூர் (Ruhr).
ரயில் தளங்கள்.—ஸராடியோ (Saradeyo).
ஸப்ளை முனைகள்.—பால்கன்ஸ் (Balkans).
எண்ணெய்க் கிணறுகள்.-வியன்னா (Vienna).
போக்குவரத்துகள்.—இதாலியில் யுத்தம் நடக்கும் பிரதேசங்கள்.
பாலங்கள்.—வட இதாலி (Northern Italy).
விமானச் சண்டைகள்.—ருஷ்ய யுத்த அரங்கம் முழுவதும். (6 எதிரி விமானங்கள் சுட்டுத்தள்ளப்பட்டன).

தூரக்கிழக்கு (Far East).

விமான நிலயம்.—விஸாயாஸ் (Visyas) (பிலிப்பைன்ஸ்).
ஜப்பானிய விமானங்கள்.—ஸெலிபஸ் (Celebes), போரோ (Boroe), நியூ கினியா (New Guinea).

பர்மா (Burma).

ஜப்பானிய சைனியங்கள்.—காதா (Katha), பாமோ (Bhamo).
கப்பல்கள், ஸ்தாபனங்கள்.—ஜவாய் (Javoy).

8—11—44. (புதன்கிழமை).

ஜெர்மனியும், ஐரோப்பாவில் யுத்தம் நடக்கும் பிரதேசங்களும்.

பகல்.—தொடர்ச்சியான எண்ணெய்க் கிணறு ஸ்தாபனங்கள்.-மெர்ஸிபர்க் (Merseburg).
ரயில்வே தளங்கள்.—ரெய்னி (Rheine).
தொடர்ச்சியான எண்ணெய்க் கிணறு ஸ்தாபனங்கள்.—ரூர் (Ruhr).
ரயில் லயன்கள், பாலங்கள்.—ஜெர்மன் எல்லையில் (German).
எதிரி போக்குவரத்துகள்.—போ (Po) சமவெளி.
ரயில்வேக்கள் பாலங்கள்.—யுத்தம் நடக்கும் பிரதேசங்கள்.
போக்குவரத்துகள் இதர இலக்குகள்.—யூகோஸ்லாவியா (Yugoslavia), அல்பேனியா (Albania).
விமானச் சண்டைகள்.—கிழக்கு யுத்த அரங்கம் முழுவதும். (18 எதிரி விமானங்கள் சுட்டுத்தள்ளப்பட்டன.)
இரவு.—இலக்குகள்—ஹனோவர் (Hanover) மேற்கு ஜெர்மனியில் சில இடங்கள்.

தூரக்கிழக்கு (Far East).

பீரங்கிகள் இதர இலக்குகள்—ஆர்மாக் (Ormoc).
கப்பல்கள்.—மிண்டானோ (Mindanao).
விமான நிலயங்கள்.—அல்காண்டி (Aicante), செபு (Cebu), நீக்ராஸ் (Negros), பானெய் (Panay).

பர்மா (Burma).

ரயில், ரஸ்தா, பாலங்கள்.—போகியோ (Bowgyo), லாஷியோ (Lashio), மாண்டலே (Mandalay) ரஸ்தா.

9—11—44 (வியாழக்கிழமை).

ஜெர்மனியும், ஐரோப்பாவில் யுத்தம் நடக்கும் பிரதேசங்களும்.

பகல்.—பீரங்கி ஸ்தாபனங்கள்.—டன்கர்க் (Dunkirk).
போக்குவரத்து இலக்குகள்.—ஹாலந்து (Holland).
ரயில்வே ஸ்டேஷன்.—வீஸி (Weeze).
போக்குவரவு ஸ்தலங்கள்.-கெல்ஸங்கிர்ச்சென் (Gelsenkirchen).
பாலங்கள்.—டஸ்ஸல்டார்ப் (Dusseldorf).

நீராவி யந்திரங்கள், கப்பல்கள்.—ரைன் லாந்து (Rhine land).
விமான நிலயங்கள்.—விஸ்பாடென் (Wiesbaden), ஸாக்ஸென்ஹிம் (Sachsenheim).
இலக்குகள்.—மெட்ஸ் (Metz) பிரதேசம்.
யுத்த தளவாடங்கள் தயார் செய்து சேமிக்கு மிடங்கள்.—ஸார்பிரக்கன் (Saarbrucken).
தரைமீதுள்ள இலக்குகள்.—ஸ்டட்கார்ட் (Stuttgart) டிற்கும், கியெஸ்ஸன் (Giessen) னிற்கும் இடையேயுள்ளவை.
போக்குவரத்து இலக்குகள்.—போ (Po) சமவெளி, யூகோஸ்லாவியா (Yugoslavia), ஆல்பேனியா (Albania).
கப்பல்கள்.— எட்ரியாடிக் (Adriatic).
விமானச் சண்டைகள்—கிழக்கு யுத்த அரங்கம் முழுதும்.

தூரக்கிழக்கு (Far East).

படகுகள்.—பாராமுஷிரோ (Paramushiro).
சர்க்கரை ஆலை.—ரோடா (Rota) தீவு.
இலக்குகள்.—போனின் (Bonin) தீவு.

பர்மா (Burma).

பாலங்கள்.—பாங்ஸெய்க் (Hpaungzeik), காலிவா (Kalewa).
பீரங்கி ஸ்தாபனங்கள்.—காலிமியோ (Kalemyo).
சப்ளை சேமிப்பு டெப்போக்கள்.—காலின் (Kawlin).
இலக்குகள்.—ஷ்வேபோ (Shwebo).

10—11—44. (வெள்ளிக்கிழமை).

ஜெர்மனியும், ஐரோப்பாவில் யுத்தம் நடக்கும் பிரதேசங்களும்.

பகல்.—எதிரித் துருப்புகள் பீரங்கிப் போக்குவரத்துகள்.—பிரான்ஸில் யுத்தம் நடக்கும் பிரதேசங்கள்.
பீரங்கி ஸ்தாபனங்கள், பலமான சேனைகள்.—டன்கர்க் (Dunkirk).
போக்குவரத்துகள் பாலங்கள்.—ரூர் (Ruhr), போ (Po) சமவெளி ; வட இதாலி (N. Italy).
இலக்குகள்.—யூகோஸ்லாவியா (Yugoslavia).
விமானச் சண்டைகள்.—ருஷ்யா யுத்த அரங்கம் முழுவதும்.
இரவு.—இலக்குகள்.—மேற்கு ஜெர்மனி (W. Germany) ; ஹனோவர் (Hanover).

தூரக்கிழக்கு (Far East).

ஜப்பானிய துணைக்கப்பலோடுகூடிய கப்பற் கூட்டங்கள்.—ஆர்மாக் (Ormoc). (4 போக்குவரத்துக்கப்பல்களும், 6 யுத்தக்கப்பல்களும் மூழ்கடிக்கப்பட்டன).
எதிரி சைனியங்கள்.—பிலிப்பைன் லிலுள்ள லெய்ட்டி (Leyte).

பர்மா (Burma).

சேமிப்புகள்.—கப்பல்கள் ஸ்தாபப் போக்குவரத்துகள் மத்திய பர்மா (C. Burma) வட ஸியாம் (N. Siam).
எதிரி சைனியங்கள் பாலங்கள்.—சிண்டுவின் (Chindwin).
எதிரி விமான நிலயங்கள்.—அரக்கான் (Arakan) கடற்கரை.

11—11—44. (சனிக்கிழமை).

ஜெர்மனியும், ஐரோப்பாவில் யுத்தம் நடக்கும் பிரதேசங்களும்.

பகல்.—போக்குவரத்துகள்.—கெல்ஸென் கிரிச்சன் (Gelsenkirchen).
தொடர்ச்சியான எண்ணெய்க் கிடங்குகள்.—காஸ்ட்ராப் ரெக்ஸெல் (Castrop-Rauxel).
தளவாடக் குவியல்கள் கப்பல்கள்.—ஹாலந்திலுள்ள ஜெர்மன் துருப்புகள்.
ரயில் இலக்குகள் விமான நிலயங்கள்.—ஜெர்மனி (Germany) ஆஸ்திரியா (Austria) வட இதாலி (N. Italy).
பீரங்கி ஸ்தாபனங்கள்.—துருப்பு முகாம்கள் பலமான படைகள் யுத்தம் நடக்கும் பிரதேசங்கள்.
இரவு.—சுரங்கவெடி பாவுதல்.—எதிரி ஜலப் பிராந்தியங்களில்.
எண்ணெய்க் கிணறு இலக்குகள்.—வல்கனோ (Volcano) தீவுகள்.
ஜப்பானின் சைனியங்கள்.—ஆர்மாக் (Ormoc) கடல்.

பர்மா (Burma).

சேமிப்புகள், கட்டடங்கள், கப்பல்கள்.—ஐராவதி (Irrawaddy) நதி மத்திய பர்மா.
எதிரி சைனியங்கள், மோட்டா வண்டிகள்.—சிண்ட்வின் (Chindwin).—
ஜப்பானிய முனைகள்.—காதா (Katha), பாமோ (Bhamo).

விரோதிகளின் விமானப்படையெடுப்புகளின் விவரங்கள்.

6—11—44. (திங்கட்கிழமை).

பிரிடன் (Britain).

சில இடங்கள்.—தென் இங்கிலாந்து.

ருஷ்யா (Russia).

எதிரி விமான நடவடிக்கை இல்லை.

தூரக்கிழக்கு (Far East).

நேசதேச விமானங்கள்.—இம்பால் (Imphal) சமவெளி (4 எதிரி விமானங்கள் நாசமாக்கப்பட்டன).

7—11—44. (செவ்வாய்க்கிழமை).

பிரிடன் (Britain), ருஷ்யா (Russia), தூரக்கிழக்கு (Far East).

எதிரி விமான நடவடிக்கையில்லை.

8—11—44. (புதன்கிழமை).

பிரிடன் (Britain), ருஷ்யா (Russia).

எதிரி விமான நடவடிக்கை இல்லை.

தூரக்கிழக்கு (Far East).

நேசதேச சைனியங்கள்.—ஆர்மாக் (Ormoc) வலைகுடா, பிலிப்பைன்ஸிஅள்ள லெயிடி (Leyte).

9—11—44. (வியாழக்கிழமை)

பிரிடன் (Britain).

ஒரு தகவலும் இல்லை.

ருஷ்யா (Russia).

எதிரி விமான நடவடிக்கை இல்லை.

தூரக்கிழக்கு (Far East).

விமானச் சண்டைகள்.—லெயிட்டி (Leyte).

10—11—44. (வெள்ளிக்கிழமை).

பிரிடன் (Britain.)

சில இடங்கள்.—தென்கிழக்கு இங்கிலாந்து லண்டன் (London).

ருஷ்யா (Russia).

எதிரி விமான நடவடிக்கை இல்லை.

தூரக்கிழக்கு (Far East).

ஒரு தகவலும் இல்லை.

11—11—44. (சனிக்கிழமை).

பிரிடன் (Britain), ருஷ்யா (Russia), தூரக்கிழக்கு (Far East).

ஒரு தகவலும் இல்லை.

12—11—44 (ஞாற்றுக்கிழமை).

பிரிடன் (Britain).

ஒரு தகவலும் இல்லை.

ருஷ்யா (Russia), தூரக்கிழக்கு (Far East).

எதிரி விமான நடவடிக்கை இல்லை.

யுத்தக் குறிப்புகள்.

திரிந்தலையும் பாடகர். மிஸ்ட்டர் சர்ச்சில் பாரிஸுக்குச் சென்று பிரான்ஸின் புனருத்தாரணத்தைப் பற்றி அக்கரை காட்டி வருகிறார். அவருடன் ஈடனும் சென்றிருக்கிறார். அவர் மாஸ்கோ, கெய்ரோ, ஆதென்ஸ், ரோமைப் பார்வையிட்ட பின் பாரிஸுக்குச் சென்றிருக்கிறார்.

சர்ச்சில் பிரான்ஸின் அந்தரங்க நண்பன் என்று சம்பவங்கள் துவக்குகின்றன. அந்தரங்க நண்பனென்பது விசுவாசம் பலமாகயிருப்பதென்பதுதான். பிரான்ஸ் ஸுபிக்ஷமாக இருந்தபொழுது அதைப் பாராட்டினார். அதற்குத் துன்பமேற்பட்டபொழுது பிரிடனின் ஒத்தாசையை அளிப்பதாகக் கூறினார். யோஜனை நிராகரிக்கப்பட்டு, பிரான்ஸ் வீழ்ச்சிபெற்றபின் சர்ச்சில்தான் ஆறுதலும், உத்சாகமும் ஊட்டி வந்தார். ஆகையால் அவர் பாரிஸுக்கு விஜயம் செய்தபொழுது ஜனங்கள் எல்லோரும் அவரை வரவேற்றார்கள். டிகால் பின் வருமாறு சொன்னார்.

நாம் இன்று வரவேற்கும் தலைவரின் தூண்டுதலுக்குட்பட்ட நமது பழைய நேச நாடான பிரிடன் வெற்றி பெறுவதில் ஊக்கத்தையும், உலகத்தை விடுவிப்பதற்காக சிறந்த தீரத்தையும் காட்டியிராவிடில் நவம்பர் 11-ம் தேதியாகிய இன்று இவ்வளவு குதூகலம் ஏற்பட்டிராது.

இவ்வித நம்பிக்கை கொள்ளாமல் பிரான்ஸில் ஒருவரும் இருக்க முடியாது.

ஆயிரம் வருஷங்கள் நிலைக்கக்கூடியத் திட்டங்களைப் போடுவதாக ஹிட்லர் சொன்னான். ஆயிரம் வருடங்களுக்குப்பின் அவனுடைய செய்கைகளில் எவற்றை உலகம் ஞாபகத்தில் வைத்திருக்குமென்று எனக்குத் தெரியவில்லை. ஆகிலும் ஆயிரம் வருடங்கள் சென்றாலும் பிரெஞ்சு மக்கள் சர்ச்சிலில் தலைமையின்கீழ் பிரிடன் நடத்திய போரையும், பரிசிரமங்களையும், கஷ்ட அனுபவங்களையும், ஒரு நாளும் மறக்கமுடியாது.

வி வி வி வி வி

வருங்கால நடவடிக்கை. 1940-ல் இழந்த பிரான்ஸ் இப்பொழுது மீட்கப்பட்டிருக்கிறது. ஆகிலும் அதன் புனருத்தாரணம் பாக்கி இருக்கிறது. பிரான்ஸ் உயிரைப் பெற்றுவிட்டதே ஒழிய அதன் தேக பலம் முன்னிருந்த நிலைமைக்கு வரவில்லை. பிரான்ஸ் யுத்தத்தில் சீர்கெட்டுவிட்டது. நாட்டில் வறுமையும், அமைதிக்குறைவும் தாண்டவமாடுகின்றன. இருப்புப்பாதைகளும், ரஸ்தாக்களும் அழிக்கப்பட்டுவிட்டன. 20,000 பாலங்களும், 1,18,000 ரயில்வே எஞ்ஜின்களும் ஜெர்மானியர்களாலோ, பிரிடிஷ் அமெரிக்க வெடிகுண்டுகளாலோ அல்லது மாக்விப் படைகளாலோ அழிக்கப்பட்டுவிட்டன. அதன் தந்தி, டெலிபோன் அமைப்புகள் சீர்கெட்டுப் போய்விட்டன. அநியாய லாபம் சம்பாதிப்பவர்கள் முற்பட்டு விட்டார்கள். கள்ள வியாபாரம் ஓங்கிவிட்டது. உணவுப்பொருள்களும், கைத்தொழில்களும் ஏற்பாடு செய்யப்படவேண்டும்.

அத்துடன் பிரான்ஸ் படைகளைப் போருக்கு அனுப்பவேண்டும். அதற்குப் போதுமான ஆயுதங்கள் கிடையாது.

நேசதேசத்தார்கள் தாத்காலிகமாக ஒரு நிர்வாகத்தை அமைத்து அதற்கு ஐரோப்பிய ஆலோசனைக் கமிஷனில் ஒரு ஸ்தானம் வழங்கியிருக்கிறார்கள்.

பிரிடன் நிர்வாகத்தை அங்கீகரித்துவிட்டாலும் டிகாலுக்கு அநேக முக்கியமான அலுவல்களிருக்கின்றன. நாடெங்கும் அவனுடைய அதிகாரத்தைப் பரவச்செய்ய வேண்டும். எதிரியுடன் ஒத்துழைப்பவர்களை ஒழிக்கவேண்டும். சேனையுடன் ஒன்று சேர்க்கப்பட்ட மாக்விப் படைகளைத் தவிர மற்றவர்களைக் கலைத்துவிடவேண்டும். விரோத மனப்பான்மையுள்ள ராஜீயக் கக்ஷிகளை சமரசப்படுத்தி ஒன்றுபட்ட நிர்வாகத்தை அமைக்கவேண்டும். பிரான்ஸிலும் அதன் வெளியிலுமுள்ள எதிர்ப்பு இயக்கத்தின் பிரதிநிதிகள், பழைய டெபுடிகள், பொதுவுடமைக் கக்ஷிக்காரர்கள், ஸ்திரீகள் முதலியவர்களுள்ள சர்வ கக்ஷி நிர்வாகத்தை டிகால் அமைத்திருக்கிறான். பிரெஞ்சு பிரதிநிதி சபையும் கூட்டப்பட்டுவிட்டது. ஆகிலும் டிகாலின் நிர்வாகம் புனருத்தாரணத் துறையில் முற்போக்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும். அவனுடைய நிர்வாகம் தானாகப் பொறுப்பெடுத்துக்கொண்டதே ஒழிய அது அரசியல் முறையில் அமைக்கப்பட்டதல்ல.

வி வி வி வி வி

ஐரோப்பிய ஆலோசனைக் கமிஷன். இது போன்றதுதான் மற்ற நாடுகளின் நிலைமையும், ஐரோப்பாவில் அராஜகமும், உள்நாட்டுக் கலகமும் பன்னிரண்டு நாடுகளில் காணப்படுகின்றன. நாஸி கொள்ளைக்காரர்கள் பின்வாங்கும்பொழுது ஐரோப்பாவை அழித்துச் செல்லுகிறார்கள். அழிவைத் தடுக்கவேண்டுமானால் நேசதேசத்தார்கள் யுத்தம் முடியும் வரையில் காத்திருக்கக்கூடாது. இதுதான் ஐரோப்பிய ஆலோசனைக் கமிட்டியின் முக்கியமான அலுவல். ஜெர்மனியை முறியடித்தால் மட்டும் போதாது. அழிவுபெற்ற தேசங்களை புனருத்தாரணம் செய்து அவைகளில் நிர்வாகத்தை அமைக்கவேண்டும்.

வி வி வி வி வி

நாஸிகளின் மன்னிப்பு. மூனிக்கில் 1923-ம் வருஷத்தில் நடைபெற்ற சாராயக் கிடங்கு பரிசுத்தியின் ஆண்டு விழாவைக் கொண்டாடாமல் ஒதுக்கி வைத்ததற்குக் காரணங்களைக்காட்டி ஜெர்மன் மக்களுக்கு நாஸிகள் ஒரு பிரகடனத்தை பிரசுரித்திருக்கிறார்கள். இந்த நாள் நாஸிகள் அதிகாரத்துக்கு வந்த நாள். இந்தச் சமயத்தில் ஹிட்லர் சொற்பொழிவாற்றாத நாளே கிடையாது. இப்பொழுது அவர் மௌனம் சாதித்து வருகிறார். சிலர் அவன் இறந்துவிட்டானென்றும், சிலர் ஹிம்லரிடம் கைதியாக இருக்கிறான் என்றும் சொல்லுகிறார்கள். அவன் உயிருடனிருக்கிறானென்று வைத்துக்கொண்டாலும் அவனுடைய செல்வாக்கு அற்றுப்போய் விட்டது. அவனுடைய த்வனியும் சக்தியை இழந்துவிட்டது.

பள்ளிப் பிள்ளைகளைப்போல் அவன் ஜவாப்புச் சொல்ல ஆரம்பித்துவிட்டான். பூர்ணமான யுத்த அவசியம், தலைமைக்காரியாலயத்தில் அலுவல்கள்; இப்பொழுது செய்கைக்கு உசித காலமே ஒழிய, நடவடிக்கைக்குக் காலமில்லை.

அவ்விதமானால் கொண்டாட்டம் எதற்காக என்று சொல்லுகிறான். ஞாயிறன்று அதை நடத்துவானேன், அநேகர் சொற்பொழிவாற்றுவானேன்? பிரகடனத்தைவிட விரிவான பிரசங்கத்தை ஹிட்லர் ஆற்றியதுமுண்டு. அப்பொழுது அவன் ஜெயபேரிகை அடித்து வந்தான். பிரிடனை அழித்துவிடுவதாகவும், உலக ஆதிக்கம் பெறுவதாகவும் எண்ணம் கொண்டிருந்தான்.

பிரகடனத்தில் எப்பொழுதும்போல, போல்ஷீவிஸமும், யூதர்களும் தூஷிக்கப்படுகிறார்கள். ஐரோப்பாவைக் காப்பாற்றிவிடுவோமென்ற வெறும்பேச்சு காணப்படுகிறது. "தன்னைத்தானே காப்பாற்றிக்கொள்ளுங்கள். நாஸிதத்துவம் அபத்தமானது. ஐரோப்பாவுக்கு நீங்கள் வைத்தியம் செய்யவேண்டாம்." என்று நாம் சொல்லுகிறோம்.

ஜெர்மனிக்கு ஜப்பான் என்ற நண்பர் மட்டும் இருந்தபோதிலும் அபத்தமாக அது மிகவும் முக்கியமான நண்பன் என்று சொல்லிவருகிறது. மற்றவர்களெல்லாம் கக்ஷிமாறி அதனுடன் போர்புரிந்து வருகிறார்கள். ஹங்கேரியை அது இழந்துவிட்டது. நாஸிகளுக்கு விரோத மனப்பான்மையுள்ளவர்கள் அழிக்கப்பட்டுவிட்டார்களென்று சொல்லப்பட்டபோதிலும், ஜெர்மனிக்கு விரோதமாக நடப்பவர்களை நிர்மூலமாக்கப்படுமென்றும் சொல்லப்படுகிறது.

நம்பிக்கைக்கு இடமில்லை. ஸ்நேகிதன் என்று பிராங்கோ வெளியிட்டபோதிலும் அவன் ஒரு உதவியையும் செய்யப்போவதில்லை. இந்த மாறுதலுக்கு நடுநிலைமை வகிக்கவேண்டுமென்பது காரணமல்ல. அவனுடைய ஸ்தானத்தைக் காப்பாற்றிக்கொள்ளவேண்டுமென்ற கவலை அவனுக்கு ஏற்பட்டுவிட்டது. அவன் தானாக ரிட்டையராகாவிட்டால் அவன் கட்டாயப்படுத்தப்படுவான் என்று தோன்றுகிறது. அவன் பிரிடனுக்கு அனுப்பிய பசப்பு வார்த்தைகளைக் கண்டு பிரிடன் ஏமாற்றமடையவில்லை. பிராங்கோ அச்சுநாடுகளுடன் கோமிண்டரினுக்கு ஆக்ஷேபனையாக ஒப்பந்தம் செய்துகொண்டதையும், பொதுஜன மத்தியில் இரண்டு வருடங்களுக்குமுன் ஹிட்லருக்கும், முஸோலினிக்கும் வெற்றி கிடைக்கவேண்டுமென்று அவன் ஆசிகூறியதையும், டாஞ்சியரில் உள்ள பிரிடிஷ் அயல்நாட்டு மந்திரி காரியாலயத்தைத் தாக்கியதையும், உல்ப்ராம் சம்பவத்தையும், ருஷ்யப்போர்முனைக்கு நீல டிவிஷன் படைகளை அனுப்பியதையும், ஆரஞ்சுக் கூடைகளில் வெடிகுண்டுகளை அமைத்ததையும், இதாலி நேசதேசக் கக்ஷியில் சேர்ந்த பின்னும் ஸ்பானிஷ் துறைமுகங்களிலுள்ள இதாலியக் கப்பல்களை ஒப்புவிக்க மறுத்ததையும் பிரிடன் மறந்துவிடவில்லை. அவன் பரம துரோகி. அவன் குற்றம் பொருந்தியவன் என்பதுடன் அவன் பாஸிதத்துவத்தை ஆதரிக்கிறான். அதை அழிக்கத்தான் நேசதேசத்தார்கள் முற்பட்டிருக்கிறார்கள். பிராங்கோவுக்குத் தயவு காட்டினால் நேசதேசத்தார்கள் பாடுபடும் ஜனநாயகக் கொள்கை அபத்தப்பேச்சாகும். டெயிலி ஹெரால்டு பத்திரிகை பின்வருமாறு சொல்லுகிறது.

“ பிராங்கோவுக்கு இனி நம்பிக்கைகொள்ள இடமில்லை. ஜெனரல் பிராங்கோவை ஏமாற்றுவதாக உத்தேசமில்லை. அவனுடைய தவறுதல்களை எடுத்துரைப்போம். பிராங்கோ ராஜ்யத்தைக் கொள்ளையடித்தவன், ஜனநாயக விரோதி, பிரிடனின் சத்ரு என்று அவனிடம் சொல்லுவோம். அவன் சமாதான மஹாநாட்டுக்கு வரவேண்டுமென்றால் முதலில் நிர்வாகத்தைக் கலைத்துவிடவேண்டும். ஜெனரல் பிராங்கோவிடம் வீரத்தன்மையிருந்தால் அவன் உடன்காலத்திலேயே முடி துறக்கவேண்டும். ஸ்பானிஷ் மக்களின் ரத்தத்தைச் சிந்தக் கூடாது.

வி வி வி வி வி

ஆட்டோ பிரபு. ஆஸ்திரியாவின் சிம்மாசனத்துக்கு பாத்தியம் கொண்டாடும் ஆட்டோ இப்பொழுது ஆஸ்திரியாவில் தோன்ற முயன்று வருகிறான். ருஷ்யப் படைகள் புடாபெஸ்ட் முட்டுக்கட்டையை அகற்றிவிட்டு வியன்னாவை விடுவிக்கும் தருணத்தை அவனை எதிர்பார்த்து நிற்கின்றன. ஆஸ்திரியாவை விடுவித்து அதைத் தனிப்பட்ட அரசுபுரியும் நாடாகச் செய்வதென்று பிரிடனும், ருஷ்யாவும் கூட்டறிக்கையை வெளியிட்டிருக்கின்றன. ஆஸ்திரியாவிலுள்ளவர்களும் மன்னர் ஆக்ஷியை வரவேற்கிறார்கள். க்வீஸக்கில் நடைபெற்ற இரண்டாவது மஹாநாட்டின் இடைவெளிகளில் ஆட்டோ பிரபு சர்ச்சிலையும், ரூஸ்வெல்ட்டையும் சந்தித்துப் பேசியிருக்கிறார். அமெரிக்காதான் அவரை விமானத்தில் ஏற்றி ஐரோப்பாவுச்கு அனுப்பியிருக்கிறது. அவர் இப்பொழுது லிஸ்பனிலிருந்துகொண்டு ஆஸ்திரியாவுக்குத் திரும்பும் காலத்தை எதிர்பார்த்து வருகிறார்.

வி வி வி வி வி

மேற்குப் போர்முனை. சென்ற வாரம் வியாழனன்று மான்ஷன் ஹௌஸில் மிஸ்ட்டர் சர்ச்சில் சொற்பொழிவாற்றியபொழுது பிரிடன் ஹாலந்திலும், இதாலியிலும் போரை நடத்திவருகிறதென்று சொன்னார். கெட்ட பருவகால நிலைமையிலும் ஹாலந்தில் அதிக முன்னேற்றம் ஏற்பட்டிருக்கிறது. ஐரோப்பாவில் ஷெல்டும், வால்சேரன் தீவும் ஆண்ட்வெர்ப்பும் விடுவிக்கப்பட்டன. ஆண்ட்வெர்ப் துறைமுகம் உபயோகமுள்ளதாக ஆனபின் ஜெர்மனியைத் தாக்க உதவிப் படைகள் குவிக்கப்படும்.

அமெரிக்க 8-வது படை பிரான்ஸில் மெட்ஸுக்கும், நான்ஸிக்கும் மத்தியில் ஒரு புதிய தாக்குதலைத் துவக்கிற்று. மோஸல் நதியைத்தாண்டிவிட்டது. மெட்ஸ், டாரண்ட், கோட் படைகள் வளைக்கப்பட்டன.

வி வி வி வி வி

பால்டிக். இங்கு முக்கியமான சம்பவங்கள் நடைபெறுகின்றனவென்று பெர்லினும், ஸ்டாக்ஹோமும், மாஸ்கோவும் சொல்லுகின்றன. கிழக்கு பால்டிக் பிரதேசம் போர் வட்டாரம் என்று ஜெர்மனி வெளியிட்டதை ஸ்வீடன் ஒப்புக்கொண்டது. ஸ்வீடிஷ் கப்பல்கள் ஸ்வீடிஷ் சமுத்திரங்களுக்கு வந்துவிடவேண்டுமென்று ஸ்வீடன் உத்தரவிட்டது. அவைகளும் துணைக்கப்பல்கள் தேவை என்று சொல்லிவிட்டன. ஸ்வீடன் போரிலீடுபடும்படி கட்டாயப்படுத்தப்படும். ஜெர்மனி வசமுள்ள டான்ஸிக், கிட்னியா துறைமுகங்கள் பனிக்கட்டி மயமாக இருக்கின்றன. கடல் மார்க்கமாக ருஷ்யா பால்டிக் கடற்கரையில் இறங்கிவிடுமென்று ஜெர்மனி பயப்படுகிறது.

டிர்பிட்ஸ். கஷ்டங்கள் தொடர்ச்சியாகத் தான் வரும். டிராம்ஸோ வளைகுடாவுக்கருகில் ஜெர்மனியின் கப்பலான 40,000 டன்கள் எடையுள்ள டிர்பிட்ஸை பிரிடிஷ் லங்காஸ்டர் விமானங்கள் 12,000 ராத்தல்கள் எடையுள்ள குண்டுகளை வீசி மூழ்கடித்துவிட்டன. வடக்குக் கடலில் ஏற்பட்டிருந்த அபாயம் இதன் மூலம் நீங்கிவிட்டது.

வி வி வி வி வி

இதாலி. இதாலியில் கடும் போர்கள் நடைபெற்றன. அங்கும் நமக்கு வெற்றிதான். அபினைன் மலைகளும், கோதிக் அரணும் தாண்டப்பட்ட பின் போ நதிப் பள்ளத்தாக்கிற்கு நமது படைகள் வந்துவிட்டன. பார்லி பிடிபட்ட பின் படைகள் ராவென்னாவை நோக்கி முன்னேறுகின்றன. கெஸ்ஸல்ரிங், அடிகா நதிக்கரையில் புதிய அரணை ஏற்படுத்தி இருக்கிறான். அது டாட்டாட் சங்கத்தாரால் பலப்படுத்தப்படுகிறது.

வி வி வி வி வி

யூ-படகு. யூ படகு அட்டகாசம் குறைந்துவிட்டது. அக்டோபர் மாதத்தில் அதன் நடவடிக்கை எல்லா மாதங்களையும் விட மிகவும் குறைவானது என்று உத்தியோக முறையில் சொல்லப்படுகிறது. அதுபோல கப்பல் நஷ்டமும் மிகவும் குறைவானது.

வி வி வி வி வி

V-2 ஆயுதம். இது ஜெர்மனியின் இரண்டாவது நெடுந்தூரம் செல்லும் அவுட்டு வெடிகுண்டு. இவைகள் பிரிடனைத் தாக்க அனுப்பப்படுகின்றன. அதன் விளைவுகளை எப்பொழுதும்போல் ஹிட்லர் மிகையாகச் சொல்லுகிறான். சொல்ப உயிர்ச் சேதமும், சொல்ப நஷ்டமும்தான் ஏற்பட்டிருக்கின்றன. இந்த ஆயுதம் சப்தத்தைவிட அதிக வேகமாகச் செல்லுகிறதாம். அவைகளும் குறி தவறி பொட்டல்களில் விழுகின்றன. அவைகள் புறப்படும் ஸ்தலங்களான வால்செரன், ஹேக் என்ற இடங்களில் வால்சேர்ன் நமது வசமாகிவிட்டது.

இதற்குப் பதிலாக நேசதேச விமானங்கள் மெட்ஸுக்கருகில் 1,300 வெடி விமானங்களையும், 500 சண்டை விமானங்களையும் உபயோகித்து வழியைச் சுத்திசெய்தன. பிரிடனில் லண்டனில் வெளிச்சம் அதிகரிக்கப்பட்டது.

வி வி வி வி வி

கிழக்குப் போர்முனை. புடாபெஸ்ட்டை நோக்கிப் படைகள் முன்னேறுகின்றன. அக்டோபர் 6 முதல் ஒரு மாதத்திற்குள் 100,000 ஜெர்மானியர்களும், ஹங்கேரியர்களும் கொல்லப்பட்டார்கள். டிஸாவுக்கும், டான்யூப்புக்கும் மத்தியிலுள்ள 100 இடங்கள் பிடிபட்டனவென்று ருஷ்ய அறிக்கை வெளியிட்டிருக்கிறது.

வி வி வி வி வி

பிலிப்பைன்ஸ். லெயிடியில் அமெரிக்கா முன்னேறுகிறது. எதிரி ஏராளமான படைகளைக் குவித்துவருகிறான். அவனுக்கு இதுவரையில் இங்கு மட்டும் 35,000 பேர்கள் நஷ்டமாகிவிட்டார்கள்.

வி வி வி வி வி

வடக்கு பர்மா. பருவ காலம் முடியும் சமயத்தில் நேசதேச முன்னேற்றம் ஆரம்பமாகிவிட்டது. படைகள் நான்கு பகுதிகளாகத் தாக்குகிறார்கள். வடக்குக் கோடியில் சீனர்கள் மிட்கினாவிலிருந்து பாமோவுக்கு முன்னேறுகிறார்கள். பாமோவிலிருந்து ஸால்வின் நதிக்கும், லாஷியோவிலுள்ள பர்மா ரஸ்தாவுக்கும் ரஸ்தாக்கள் செல்லுகின்றன. தெற்கில் பிரிடிஷ் துருப்புகள் மோகாங்கிலிருந்து காதாவுக்குச் செல்லுகின்றன. பாமோவும், காதாவும் பிடிபட்டால் ஐராவதியின் அடிபாகத்திலிருந்து எதிரி சுத்திசெய்யப்பட்டுவிடுவான்.

அதற்குத் தெற்கில் 5-வது இந்தியப்படை சின் மலைகளிலுள்ள கென்னடிக்குன்றிலிருந்து முன்னேறி சிண்ட்வின் பள்ளத்தாக்குக்குள் சென்றுவிட்டது.

தெற்குக் கோடியில் காலடான் நதிப் பள்ளத்தாக்கில் ஆபிரிக்கப் படைகள் எதிரியை முன்னேறவொட்டாமல் தடுத்துவருகின்றன.

வி வி வி வி வி

சைனு. சைனுவில் நிலமை மோசமாகிவிட்டது. ஆறு மாதங்களுக்குள்ளாக சைனுவுக்கு அநேகம் தோல்விகள் ஏற்பட்டுவிட்டன. ஹுனன்–குவாங்ஸி மாகாணத்தின் தலைநகரமான குவேலினை ஜப்பானியர்

கள் வளைத்துவிட்டார்கள். சைனாவின் உள்நாட்டில் பலஹீனம் ஏற்பட்டுவிட்டது. சீனப்பொதுவுடமைக் கக்ஷிக்காரர்களை அடக்க பலாத்காரம் தேவையாக இருக்கிறது. கட்டாயத்தின்பேரில் ஜெனரல் ஸ்டீல்வெல் திருப்பி அழைக்கப்பட்டதிலிருந்து சைனாவின் மனப்பான்மை வெளிப்படுகிறது. சைனாவுக்கு அனுப்பப்படும் ஸப்ளைகள் சைனாவைச் சேர்ந்ததென்று சுங்கிங் பாத்தியம் கொண்டாடுகிறது. போர்முனையிலுள்ள சைனப்படைகளைத் திருத்தி அமைக்க வேண்டுமென்று அமெரிக்கா வேண்டியதற்கு இது பதில் நடவடிக்கை. ஆகிலும் வெற்றி பெறும் வரையில் போரை நடத்துவதென்று மார்ஷல் சியாங் கே ஷேக் உறுதிகொண்டிருப்பதால் இந்த தாத்காலிகமான சங்கடங்கள் மறைந்துவிடும்.

ஹிட்லர் எங்கு சென்றான் ?

ஜெர்மனியின் சந்தேகம்.

ஹிட்லர் எங்கேயென்று ஜெர்மனியில் எங்கு பார்த்தாலும் பேசிகொண்டிருக்கிறார்கள் என்று டெயிலி எக்ஸ்பிரஸின் ஸ்டாக்ஹோம் நிருபர் சொல்லுகிறார்.

ஹிட்லர் அநேக வாரங்களுக்கு முன் இறந்து விட்டார் என்று ஸ்டாக் ஹோமுக்குத் தகவல்கள் கிடைத்திருக்கின்றன. ஹிட்லர் மாதிரி இருந்த மற்றொருவர் வெடிகுண்டு வெடித்ததில் சின்னாபின்னமடைந்து விட்டார் என்று ஜெர்மானியர்கள் சொல்லிவிட்டார்கள்.

ஹிட்லர் உயிருடனிருந்தால் உள்நாட்டு ரக்ஷகப் படையில் சேர ஜெர்மானியர்களைத் தூண்ட ஒலிபரப்பியதற்கு ஹிம்லரை ஒலிபரப்பில் பேசுவதற்கு ஏவியதற்குக் காரணமில்லை. இதனால் ஜெர்மனியின் ஜனங்கள் சஞ்சலமடைந்து பின்வருமாறு சொல்லுகிறார்கள்.

ஹிம்லரின் த்வனியும், நடையும், கொச்சைச் சொற்களும் ஹிட்லரின் சொற்பொழிவை அனுசரித்தே இருந்தன.

ஹிட்லரை கொலைசெய்ய முயற்சி செய்ததிலிருந்து ஹிம்லரும், கோயபல்ஸும் ஜெர்மனியின் காரியங்களை நடத்தி வருகிறார்கள். அவர்களின் பெயர்தான் பொது ஜனங்களிடையே வெளியிடப்படுகிறதே ஒழிய, ஹிட்லரின் பெயர் அடிபடவில்லை.

ஹிம்லர் ரோமலின் சவக்கிரியையில் பிரசன்னமாக இல்லை. இப்பொழுதான் முதல் முதலாக ஹிட்லர் பீல்ட் மார்ஷலின் சவ அடக்கத்துக்கு வரவில்லை.

ஹங்கேரிய குஸ்லிங்கான ஸாலாசியைத் தலைமைக்காரியாலயத்தில் வரவேற்காமல் அவனுக்கு ஹிட்லர் ஒரு பாராட்டுச் செய்தியை அனுப்பினான். ஹங்கேரியப் பத்திரிகைகளில் சாலாஸி ஹிட்லரை நேராகப் பேட்டி காணப்போவதாக வெளியிடப்பட்டிருந்தது.

சென்ற இரண்டு வாரங்களாக ஜெர்மன் பத்திரிகைகள் ஹிட்லரைப்பற்றி பேசவே இல்லை. அவன் மௌனம் சாதிப்பதற்கு மட்டும் ஒரு வியாக்கியானம் எழுதப்பட்டிருக்கிறது.

அக்டோபர் மாத ஆரம்பத்தில் பெர்லினிலுள்ள ஹிட்லரின் காரியாலயத்தில் ஹிட்லரை ஸ்பானிஷ் அயல்நாட்டு தூதர் சந்தித்தார். ஹிட்லர் களைப்புற்று பீதியடைந்திருந்தானென்று அவர் சொன்னார். அவர் ஹிட்லர்தான் என்பதைப்பற்றி சந்தேகமில்லையென்றும் சொன்னார். அயல்நாட்டு தூதர் இதைப்பற்றி அழுத்தமாகச் சொன்னதிலிருந்து ஹிட்லரைப்பற்றி சந்தேகம் அதிகரித்து வருகிறதென்று தோன்றுகிறது.

ஜெர்மன் சாவுத் தொழிற்சாலை.

(மதராஸ் யுத்த சஞ்சிகை.)

கீழே விவரிக்கப்படும் அழிவு முகாமைப்போல மனிதர்கள் அக்கிரமம் செய்வார்கள் என்று நம்புவதற்கில்லை. ஆகிலும் சாக்ஷியம் பலமாகயிருக்கிறது. ஜாதி, ரத்த உயர்வு என்ற குணங்கள் நாஸிகளின் காட்டுமிராண்டித்தனத்தில் குடி கொண்டிருந்ததால் அவர்கள் எவ்விதமான கோரமான நடவடிக்கையையும் மேற்கொள்ளுவது சம்பாவிதம். ருஷ்யாவிலும், போலந்திலும் அவர்கள் அநேகரைச் சுட்டுக் கொன்றார்கள். இந்நிலைமையில் ருஷ்யர்கள் கோரமாகவும், இரக்கமன்னியிலும் போரை நடத்துகிறார்களென்பதில் என்ன ஆச்சரியம் இருக்கிற்து.

லப்ளினுக்குப் போகும் ரஸ்தாவில் கோம் என்னும் இடத்திற்கு சமீபத்திலுள்ள ஜெர்மன் கைதி முகாமுக்கு ஆரம்ப காலத்தில் இரண்டாவது டாச்சா என்ற பெயர் வழங்கப்பட்டிருந்தது. ஏனெனில் ஜெர்மன் முகாமான டாச்சாவைப்போல அது அமைக்கப்

பட்டிருந்தது. அதன்பின் நிர்மூலமாக்கும் முகாம், பெர்னிக்டங்ஸ்லேகர் என்று பொருத்த மான பெயரிடப்பட்டிருந்தது. இந்த முகாமைப்பற்றி ருஷயப் பத்திரிகைகளில் கோன்ஸ் டாண்டின் சிமோனுவ், போரிஸ் கோர்படாவ், எவ்கனி கிரிகர் முதலியவர்கள் பூரா விவரங் களையும் வெளியிட்டிருக்கிறார்கள்.

சாவு முகாம் 25 சதுர கிலோ மீடர்கள் பரப்புள்ளது. "கைதி முகாம்களைச் சுற்றி மின்சார சக்தியுள்ள முள்ளுக்கம்பி வேலை அமைக்கப்பட்டிருந்தது. இந்த இடங்களில் கைதிகளுக்கு விடுதிகள் கட்டப்பட்டிருந்தன. ஸைக்ளோன் வாயுவால் மூச்சு திணற அடைக் கப்படக்கூடிய வாயு அறைகளும், அவர்களைக் கொளுத்தும் சுடுகாடும், சவங்களை சுட்டுத் தள்ளும் குழிகளும், ஜனங்களைத் தூக்கிலிடும் தூக்கு அமைப்பும் அங்கு அமைக்கப்பட் டிருந்தன. அங்கு அழகிய குடிசைகளும், பூந்தோட்டங்களும் முன் தோட்டத்தில் சாய்மான நாற்காலிகளும், கொலையாளிகள் ஆசுவாசமடைவதற்காக கட்டப்பட்டிருந்தன. இயற்கை அழகைப்பார்த்து அவர்கள் சற்று ஆசுவாசமடைவார்கள்.

ஐரோப்பாவின் எல்லா தேசத்தார்களும் அகப்பட்டுக்கொண்டார்கள்.

ஐரோப்பாவின் எல்லா பாகங்களிலிருந்தும் லக்ஷக்கணக்கானவர்கள் இங்கு கொண்டு வரப்பட்டு கூட்டம் கூட்டமாகக் கொலை செய்யப்பட்டார்கள்—அவர்கள் பின்கண்ட தேசத் தவர்கள் :—போலந்து, ருஷ்யா, யூக்ரேனியா, பேலோ-ருஷ்யா, லிதுவேனியா, லாட்வியா, இதாலி, பிரான்ஸ், ஆல்பேனியா, குரோஷியா, ஸெர்பியா, ஸெக்கோஸ்லாவியா, நார்வே, கிரீஸ், ஹாலந்து, பெல்ஜியம், துருக்கி, சைனு. அவர்களுள் ராஜீயக் கைதிகளும், யுத்தக் கைதிகளும் அந்த முகாமில் குழந்தைகளும் இருந்தார்கள். எட்டு வயதுக்குட்பட்டவர்கள் பெற்றோர்களுடன் வசித்து வந்தார்கள். மற்றவர்கள் முகாம்களில் வசித்து வந்தார்கள்.

எவ்வளவு லக்ஷம் ஆண்கள், பெண்கள், குழந்தைகள் நிர்மூலமாக்கப்பட்டன என்று இப்பொழுது கணக்கிடமுடியாது. முகாமில் ஒரு கிட்டங்கியில் லக்ஷக்கணக்கான ஜோடுகள் மூட்டையடுக்கி வைக்கப்பட்டிருக்கின்றன. அவைகள் இறந்தவர்கள் அணிந்துகொண் டிருந்தவை.

சுடுகாட்டிற்கு அதிபதி மன்பெட் என்ற ஜெர்மன். அவன் அங்கு வசித்து வந்தான். சவங்கள் முருகிப்போகும் வாசனை அவனுக்குப் பிடித்தமானதாம். அவன் சிறிது விநோத மாகப் பேசுவானும். ஒரு கைதியைப் பார்த்து நீ எப்பொழுது என்னுடைய உலைக்கு வருவாயென்று கேட்பானும். மறுபடியும் அவனை முதுகில் தட்டிக்கொடுத்து "கவலைப் படாதே, உனக்கு நன்ருக நெருப்பை வளர்த்து வைக்கிறேன்" என்று அவன் சொல்லு வானும்.

பிசாசுகளின் புன்னகை.

இதேவிதமாக அந்த முகாமிலுள்ள S. S. படையிலுள்ள எல்லோரும் வேடிக்கையாகப் பேசுவார்கள். இங்கு ஒரு உதாரணத்தைக் கூறுவோம்.

ஒரு கைதியிடம் ஒரு S. S. படையைச் சேர்ந்த ஒருவர் சென்று சொன்னார். "நான் உன்னை சுட்டுக் கொல்லப்போகிறேன்".

கைதிக்கு முகம் வெளுத்து வணக்கத்துடன் நின்றுன். S. S. படை வீரர் துப்பாக்கியை எடுத்து ஹிருதயத்தில் நோக்கிக்காட்டி சடு என்று கூச்சலிட்டான். கைதி கண்களை மூடிக் கொண்டான். ஒரு வேட்டுச் சத்தம் கேட்டது. தலையில் பலமான அடி விழுந்தது. அவனுக்கு பிரக்ஞை போய்விட்டது. அவனுக்கு மயக்கம் தெளிந்தபொழுது அவன் இரண்டு ஜெர்மானியர்களைக் கண்டான். ஒருவர் அவனைச் சுட்டவர். மற்றொருவர் தடியால் அடித்தவர். இரண்டு ஜெர்மானியர்களும் வயிருரச் சிரித்தார்கள். அவர்கள் சொன்னார்கள் "நீ இறந்துவிட்டாய். நீ வேறு உலகத்திலிருக்கிறாய்". அங்கும் ஜெர்மானியர்களிருக்கிறார் கள். S. S. படைகளிருக்கின்றன.

இவ்விதமாக வேடிக்கை செய்கிறவர்கள் பக்காக் கொலையாளிகள். அவர்கள் கொலை செய்யுமுன் கைதிகளுக்கு உண்மையைச் சொல்லி விடுவார்கள். கொலை தண்டனை விதிக்கப் பட்டவர்களை தங்களுடைய சவக்குழிகளைத் தோண்டும்படி கட்டாயப்படுத்திவிடுவார்கள். சுடுகாட்டில் தங்களுடைய சகாக்களின் சவங்களை எரிக்கும்படி மற்ற கைதிகளைக் கட்டாயப் படுத்துவார்கள். பிறகு அவர்களும் தீக்கிரையாக்கப்படுவார்கள். "அவர்களை சங்கடப் படும் சாக்ஷிகள்" என்று ஜெர்மானியர்கள் அழைப்பார்கள். ஐந்து உலைகள் சுடுகாட்டில் எரிந்துகொண்டிருக்கும். தினசரி 14,000 சவங்கள் சாம்பலாக்கப்படும்.

அழிக்கும் முறைகள்.

ஜனங்களை நிர்மூலமாக்குவதில் பலவேறு உபாயங்கள் கையாளப்பட்டன. கைதி வந்த உடன் தொத்து வியாதியுள்ள முகாமுக்கு அனுப்பப்படுவான். அங்கு T. B.-யால்

பீடிக்கப்பட்டு சாகும் தருவாயிலிருப்பவர்கள் வசித்து வருவார்கள். 20 நாட்களுக்குப்பின் அந்தக் கைதி இறந்துபோவான். ஜெர்மன் உத்தியோகமுறைக் கணக்குப்படி இந்த வியாதியால் 1,654 பேர்கள் உயிர் துறந்திருக்கிறார்கள்.

இத்துடன் வறுமையினாலும் சிலர் உயிரைத் துறந்திருக்கிறார்கள்.

முகாமிலுள்ள புத்தகத்தில் ஒருவன் 32 கிலோ கிராம் எடையுள்ளவன் என்று சொல்லப்பட்டிருக்கிறது. அநேகர்கள் களைப்புற்று இறந்தார்கள் என்பதை இது ருஜுப்படுத்துகிறது.

மற்ற கொலை வழிகளும் உண்டு. ஒவ்வொரு S. S. ஆளும் ஒவ்வொரு ஜெர்மன் ரகசிய போலீஸாரும் தனிப்பட்ட முறைகளைக் கையாண்டு வந்தான். இரும்புக் கம்பிகள், டாம்மித் துப்பாக்கிகள் உபயோகிக்கப்பட்டன. மேஜோடினால் வயிற்றில் உதைப்பார்கள். ஸ்திரீகள் முகாமிலுள்ள S. S. படையைச் சேர்ந்த பெண் கசையை உபயோகிப்பாள். அவள் ஸ்திரீகளை ஸ்தனங்கள் பேரிலும், குஹ்ய ஸ்தானங்களிலும் கசையால் அடிப்பாள். அவர்கள் சாகும் வரையில் கசையால் அடித்தே தீருவாள்.

வ்ளாடிஸ்லாவ் ஸ்காவ்ரோனெக் என்னும் டிரைவர் பின்வருமாறு சொல்லுகிறான். "ஒரு ஜெர்மன் ஸ்திரீ ஆறு குழந்தைகளை சுடுகாட்டிற்கு அழைத்து வந்தாள். அவைகள் நான்கு முதல் 8 வயது வரையிலுள்ளவை. சுடுகாட்டின் அதிகாரியான மன்பெட் அவர்களுடைய ஆடையை எடுத்துவிட்டு அவர்களைச் சுட்டுக் கொன்றான். சவங்களை அடுப்பில் போட்டுவிட்டான். நான் அப்பொழுது சர்பராக்களைக் கொண்டு சென்றேன்".

இந்தக் கொடுமை முடிந்துவிட்டது.

ஜலதாரையைக்கட்ட நியமிக்கப்பட்ட லப்ளினிலிருந்து வந்த இஞ்ஜினியரான பீடர் டெனிஸோவ் சொல்லுகிறான். "கைதிகள் ஒரு சமயத்தில் S. S. படையினரிடம் சென்று எங்களைத் தூக்கிலிடுங்கள் என்று சொன்னார்கள். அவர்கள் சந்தோஷத்துடன் கொக்கரித்தார்களாம்".

ஸ்டார்ம் துருப்பாளர் ஒருவனுடைய கழுத்தில் சுருக்குப் போட்டுவிட்டு அவனைக் குழிக்குள் தள்ளினான். அவன் இறந்தான். மற்றவனும் தானே சுருக்கைக் கழுத்தில் மாட்டிக்கொண்டு குழிக்குள் விழுந்து இறந்தான். மரணத்தை எதிர் பார்த்து அநேக நாள் உயிருடனிருப்பதைவிட திடீரென்று உயிர் துறப்பது நலமென்று கைதிகள் நினைத்தார்கள்.

நேசதேசப் படைகளுக்கு எவ்வித புகழுரையும் தகும்.

இதாலியப் போரைப்பற்றி ஜெனரல் அலெக்ஸாண்டர் விமர்சனம்.

(டெயிலி டெலகிராப்).

இதாலியப் போரை விமர்சனம் செய்யும் முறையில் ஜெனரல் அலெக்ஸாண்டர் முதன் முதலாக அநேக உண்மைகளையும், புள்ளி விபரங்களையும் வெளியிட்டிருக்கிறார். அவைகளிலிருந்து அவருடைய நாயகத்துக்குட்பட்ட நேசதேசப் படைகளின் அரிய சேவைகள் பூராவையும் நாம் அறியக்கூடியதாக இருக்கிறது.

இதாலியப் போர்முனையின் காரணமாகத்தான் ஹிட்லர் அங்கஹீனர்களையும், செவிடர்களையும், நோயாளிகளையும், பையன்களையும், அறுபது வயதாகியவர்களையும், சேனைக்குத் திரட்டும்படி நேர்ந்துவிட்டது. ஹிட்லரும், அவனுடைய யுத்த தந்திரிகளும் இதாலியிலுள்ள முக்கியமான தற்காப்பு ஸ்தானங்களை எப்பாடுபட்டும் காப்பாற்றிவிட வேண்டுமென்று உத்தரவிட்டிருந்தார்கள். நேசதேசப் படைகளுக்கு சமமான சக்திபெற்ற படைகளையும் கெஸ்ஸல்ரிங்குக்கு உதவியாக அனுப்பினார்கள்.

கெஸ்ஸல்ரிங் சக்தியுள்ள கமாண்டர் என்று ருஜு செய்துவிட்டான். முக்கியமாக ஆபத்து காலத்தில் அவனுடைய திறமை வெளிப்பட்டது. இதாலியத் தீபகற்பத்தில் துரிதமாக முன்னேறுவது சாத்தியமில்லை. நம்மிடம் ஆதிக்கமுள்ள விமானப் படை, டாங்கிப் படை, கடற்படை போக்குவரத்துக்களையும் திறம்பட உபயோகித்தாலும் அவைகள் மலைகளை அசைத்துவிட முடியாது. நேபிள்ஸ், ரோம், பிளாரென்ஸ், லம்பார்டி சமவெளிக்குச் செல்லும் வாயிற்படிகள் முதலியவற்றைப் பிடிக்க நாம் கடுமையாகப் போராட வேண்டியிருந்தது.

நேசதேசப் படைகளில் பதினொன்று தேசங்களிலிருந்து வந்த படைகள் சேர்ந்திருந்தன.

கெஸ்ஸல்ரிங்கின் படை வரிசைகளைப் பிளந்த படைகளுக்கு எவ்விதப் புகழுரையும் தகுதியுள்ளதாகத்தானிருக்கும். அதில் ஒரு பாகம் சேனாதிபதிக்கும், சேனைத் தலைவர்களுக்கும் உரித்ததாகும்.

கைதேர்ந்ததும், அனுபவம் பெற்றதுமான படைகள் வேறு இடங்களுக்குக் கொண்டு போகப்பட்ட போதிலும் நேசதேசப் படைகள் வெற்றி பெற்றுவிட்டன. வசந்த காலத்தில் அநேக படைகள் நார்மண்டிப் போருக்குச் சென்றன. பிரெஞ்சுப் படை பூராவும், அமெரிக்கப் படைகளும் தெற்கு பிரான்ஸில் படையெடுப்புக்குச் சென்றதால் கோதிக் அரணைப் பிளக்கும் திட்டங்கள் மாறுதலடைந்தன. ரோம் விடுவித்ததும், இதாலியில் 51,000 சதுர மைல்கள் மீட்டதும், ஐரோப்பா பூராவிலும் ஜெர்மன் புகழுக்கு ஹானியை விளைவித்தன. ஆக்கிரமிப்பு நாடுகளைக் காப்பாற்ற ஜெர்மனியின் யுத்த சக்தி போதுமானதல்லவென்றும் வெளியாகி விட்டது. பால்கன் போர்முனையில் பிளவுகள் விரிவாகிவிட்டன. இதாலிய விமான தளங்களிலிருந்து நேசதேச விமானங்கள் தாக்கி வந்ததால் ஜெர்மனியைச் சுற்றி விளைவிக்கும் நடவடிக்கை வலுவடைந்துவிட்டது.

இந்தக் கஷ்டமான போரின் விளைவுகள் இத்துடன் நின்றுவிடவில்லை. முக்கியமான ஜெர்மன் படைகளை இங்கு போர் புரியும்படி செய்து அவைகள் மேற்கிலோ, கிழக்கிலோ உள்ள மற்றப் போர்முனைகளுக்குச் செல்லாமல் தடுத்துவிடுவதுதான் முக்கிய நோக்கம். 5 லக்ஷம் ஜெர்மன் துருப்புகள் இதாலியில் சிக்கிக்கொண்டன. அந்தப் படைகள் ஸீக்பிரட் அரணைத் தற்காப்பு செய்யவும், வடக்கு ஜெர்மனியின் சமவெளியில் பிரிடிஷ் அமெரிக்கப் படைகளை முன்னேறவொட்டாமல் தடுக்கவும், டான்யூப் நதி வழியாக ருஷ்யப் படைகளை ஜெர்மனிக்குள் வரவொட்டாமல் செய்யவும் உபயோகப்படமாட்டா.

ஜப்பானின் "கடவுளின் காற்றுகள்."

ஜப்பானியர்கள் ஆதிகாலத்தில் சர்வ ஸஜீவ தத்வக்கொள்கையுள்ளவர்களாக இருந்ததில் யாதொரு விசித்திரமும் இல்லை. ஏனெனில் உலகத்தில் ஆதிகாலத்தில் எல்லோரும் அவ்விதம் தானிருந்து வந்தார்கள். இந்த உணர்ச்சியை ஜப்பான் வளர்ச்சி செய்ததும், ஜப்பானிய அதிகார வர்க்கத்தார் ஆதரித்ததும் தான் ஜப்பானை ஒப்பற்றவர்களென்று இன்று சொல்லிக் கொள்கிறார்கள். ஜப்பானியர்களையும், ஜப்பானையும் ஒப்பற்றவர்களென்று அவர்களே சொல்லி வருகிறார்கள்.

ஜப்பானில் அடிக்கும் காற்று பருவக்கோளாறல்லவென்றும் "காமி காசே," அல்லது கடவுளின் காற்றுகள் என்றும் சொல்லப்படுகிறது.

ஜப்பானியர்கள் தெய்வத்தின் சந்ததியர்கள் என்று நம்பவேண்டுமென்று ஜப்பானின் கல்வி இலாகா வற்புறுத்தி வருகிறது. இந்த திட்டம் காற்றுகள் உள்பட இயற்கையும் தெய்வத்தினிடம் வழிபட வேண்டுமென்ற அதிகார தோரணையில் செய்துவரும் பிரசாரத்தை ஒப்புக்கொள்ளும் ஜனங்களின் நம்பிக்கையின் விஸ்தாரம்தான். 1281-ம் வருஷத்தில் குப்ளாகானின் மங்கோலியப் படைகளைத் திரும்பிப் போகும்படி செய்ததும், ஜப்பானியப் படையெடுப்பைத் தடுத்ததுமான புயல் காற்றுகள் ஈஸ்வர அனுக்ரஹம் என்றும், இது ஜப்பானுக்கு சாதகம் அளித்ததென்றும் சொல்லப்படுகிறது.

ஜப்பானியச்சரித்திரத்தின் அகஸ்மாத்தான நடவடிக்கைகளை உத்தேசித்து ஜப்பானிய புண்ணிய பூமியில் ஒருவரும் ராணுவ முறையில் காலடி வைக்கவில்லையென்று ஜப்பானியர்கள் பெருமை கொண்டாடும்படி செய்துவிட்டது. இவ்விதமான மிகையான ஆனால் கெடுதலான, அபாயம் பொருந்திய ஜப்பான் முறியடிக்கப்படாது என்ற தோற்றம் இது வரையில் சரித்திரத்தில் பராமரிக்கப்பட்டு வந்தது. இதுவரையில் தெய்வம் அவர்களைக் கைவிட்டுவிடவில்லை. இவ்விதமாக ஜப்பானின் வெறிபிடித்த தேசீய உணர்ச்சிக்கு "காமி காசே" என்னும் எண்ணம்தான் அடிப்படையானது.

தெய்வீக அனுகூலத்தைப் போற்றிவரும் ஜப்பானியத் தலைவர்களே இந்த தெய்வீக அனுகூலம் ஜப்பானுக்கு அனுகூலமாகவே எல்லா சமயங்களிலுமிருக்கும் என்பதை ஒப்புக்கொள்ளவில்லையென்பதற்கு ஜப்பானிய சரித்திரமே அனுமானங்களை வெளிப்படுத்துகிறது. அந்தச் சமயங்களில் ஜப்பானியர்களின் மனித சக்தியும், சாதுர்யமும் தெய்வீக சக்தியை அடக்கியாண்டதென்றும் ஜப்பானிய சரித்திரத்திலிருந்து தெரியவருகிறது.

தெய்வானுகூலம் ஏற்படும்பொழுது ஜப்பானியத் தலைவர்கள் துப்பாக்கி, ஈட்டி, போன்ற இழிவான துரோகம், கொடுமை என்ற ஆயுதங்களைக்கொண்டு தெய்வீக சக்தியின் அக்கிரமங்களுக்கு உடந்தையாக இருந்தார்கள். இவ்விதமான அழுக்கான முறைகளில் தான் தெய்வீக சக்தி ஜப்பானுக்கு மேல்மேலும் இன்றுவரையில் வெற்றிகளைத் தந்திருக்கிறது.

ஆகிலும் ஜப்பானின் சரித்திரத்தில் அடக்கியாள முடியாத அநேக நெருக்கடிகள் ஏற்பட்டுள்ளன. உதாரணமாக சீனர்கள் அழைக்கும் டைபூன் என்ற புயல்காற்றுகள் ஜப்பானுக்குப் பலமான கெடுதலையும், நாசத்தையும் விளைவிக்கக்கூடிய சக்திபெற்றவைகள்.

ஆயுள்காலம் க்ஷீணித்துவருகிறது.

ஜப்பானின் புதிய கவலை.

(விக்ஹாம் ஸ்டீட்.)

பிலிப்பைன்ஸில் ஜப்பானியக் கடற்படையை பஸிபிக்கிலுள்ள அமெரிக்கக் கடற்படையும், ஆஸ்திரேலியக் கப்பல்களும் வெற்றிகரமாக முறியடித்த சம்பவத்தைப்போல் இது வரையில் எவ்வித கடற்படை வெற்றியும் ஏற்பட்டதில்லை.

போரிலீடுபட்ட ஜப்பானியரின் 60 கப்பல்களில் 58 கப்பல்களை மூழ்கடித்தது அற்புதமான நடவடிக்கையாகும். ஜப்பான் தாக்குதலை சமாளிக்கக் கடற்படையைத்தான் நம்பி இருக்கிறது. பஸிபிக்கிலும், ஆசியா கண்டத்திலுமுள்ள ஜப்பானின் நாடுகளைக் காப்பாற்ற வேண்டுமானால் ஜப்பானுக்கும், கொரியாவுக்கும், மஞ்சூரியாவுக்கும், சைனாவுக்கும் இடையே உள்ள கடல் மார்க்கங்கள் துணிக்கப்படாமலிருக்கவேண்டும். 40 வருடங்களுக்கு இதைவிட நிச்சயமாக சௌகரியமான நிலைமை ஏற்பட்டிருந்தபொழுது ஜப்பானியத் தலைவர்களுக்கு அதிகக் கவலை ஏற்பட்டிருந்தது. பிலிப்பைன்ஸ் கடல் போரில் கிடைத்த தோல்வி அதன் கவலையைப் பன்மடங்கு அதிகரித்துவிட்டது. அந்தப் பழைய புராணத்தை இப்பொழுது விவரிப்பது உபயோகமுள்ளதாகும்.

அப்பொழுது ஜப்பான் ருஷ்யாவுடன் போர் புரிந்தது. ருஷ்யப் படைகள் தரையிலும், தூரக்கிழக்கு சமுத்திரங்களிலும் சேர்ந்தாற்போல் தோற்கடிக்கப்பட்டன. 1904-ம் வருஷத்தில் ருஷ்ய யுத்தக் கப்பல் கூட்டம் ஒன்று பால்டிக் கடலிலிருந்து உலகத்தைச் சுற்றிக் கொண்டு விளாடிவாஸ்டாக்குக்குச் செல்லப் புறப்பட்டன. 1905-ம் வருஷம் மே மாதத்தில் தான் அவைகள் ஜப்பானிய சமுத்திரத்தை அணுக முடிந்தன. அங்கு ருஷ்ய யுத்தக் கப்பல்கள் கடந்து செல்லவேண்டிய ஷுஷிபா ஜலசந்தியை சக்திவாய்ந்த ஜப்பானியக் கடற்படைத் தற்காப்பு செய்துவந்தது.

ஜப்பானிய கடற்தளபதியான டோகோ துடித்துக்கொண்டிருந்தான். ஷுஷிபா கடற்போரில் ருஷ்யக் கடற்படை ஜப்பானியக் கடற்படையின் ஆதிக்கத்தினால் சுலபமாக அழிக்கப்பட்டது. ஆகிலும் தூரக்கிழக்கு சமுத்திரத்தில் ருஷ்யக் கப்பல் ஏதாவது தோன்றினால் ஜப்பானுக்கு அளவுகடந்த பீதி உண்டாகிவிடும்.

அப்பொழுது ஜப்பானுக்கும், மஞ்சூரியாவிலுள்ள ஜப்பானியப் படைகளுக்கும் இருந்த போக்குவரத்து மார்க்கங்கள் அபாயகரமான நிலைமையிலிருந்தன. இன்று மகத்தான வெற்றிகள் நமக்குக் கிடைக்கக்கூடியதாக இருக்கின்றன. நேசதேசத்தார்கள் முன்னேறித் தாக்கும் நிலைமையை அடைந்துவிட்டார்கள். பிரிடனின் கடற்படை இலாகாவின் முதல் பிரபுவான மிஸ்டர் A. V. அலெக்ஸாண்டர் சொல்லுவதுபோல் ஆதிக்கம் பெற்றிருக்கும் அமெரிக்கக் கடற்படையுடன் பிரிடிஷ் கடற்படையும் சேர்ந்துகொண்டு ஜப்பானியக் கடற்படையுடன் பலமாகப் போரை நடத்தக்கூடும். இந்த நிலைமையை எதிர்பார்த்துத்தான் ஜப்பானிய கடற்தளபதிகள் பிலிப்பைன்ஸில் போரை ஆரம்பித்தார்கள். அதன் பயன் அவர்களுக்கு நாசத்தை விளைவித்து விட்டது.

ஆகையால் டோக்கியோவில் ஏமாற்றமேற்பட்டிருக்கிறதென்பது நம்பத்தக்கதாக இருக்கிறது. நேசதேசத்தின் விமான ஆதிக்கத்தை ஜப்பான் எதிர்த்து நிற்க முடியாது. பிலிப்பைன்ஸ் விமானதளங்களிலிருந்த ஜப்பானிய விமானப்படையும் பலமாக நஷ்டமடைந்துவிட்டது. கடல் முற்றுகையும், விமானத் தாக்குதலும் ஜப்பானியர்களைக் கலங்கும்படி செய்கின்றன. 1905-ல் டோகோவுக்கு ஏற்பட்டதுபோல இப்பொழுது ஜப்பானியர்களுக்கும் அதிக பீதி ஏற்படுவதற்கு முகாந்திரமிருக்கிறது.

ஜெர்மானியர்களுக்கும் இவ்விதமான பீதி உண்டாகியிருக்கிறது. மாஸ்கோ விஜயத்தைப் பற்றி மிஸ்டர் சர்ச்சில் விடுத்த அறிக்கையில் கீழ்கண்ட வாக்கியங்கள் காணப்படுகின்றன. "ஜெர்மானியர்களைச் சுற்றி வளைத்து வருவதும், ஜெர்மனியின் பிராணனை வாங்கக்கூடியதுமான படைகளிடையே பிளவும், பலஹீனமும் ஏற்படுமென்று எதிரி நம்பியிருந்தால் அதை இப்பொழுது இழந்து விடப்படும்". இந்தப் பேச்சு நேசதேசத்தார்கள் சண்டை போட்டுக் கொண்டுப் பிரிந்து போய்விடுவார்களென்ற ஜெர்மனியின் அபிப்பிராயங்களுக்குச் சாவு மணி அடித்துவிட்டது.

ஆர்க்டிக்கிலுள்ள நார்வேயிலிருந்து கிழக்குப் பிரஷ்யா, ஹங்கேரி வழியாக பூகோஸ்லாவியா வரையிலும் மகத்தான ருஷ்யத் தாக்குதல் ஜெர்மனியை வடக்கிலும், கிழக்கிலும் நெருக்கி வருகிறது. பிரிடிஷ், அமெரிக்கப் படைகள் தெற்கிலும், மேற்கிலும் ஜெர்மனியை வளைத்து வருகின்றன. நேசதேச சர்பாராக்களைக் கொண்டுபோவதற்காக ஆண்ட்வெர்ப் துறைமுகத்தைப் பிடிக்க நேசதேசத்தார் செய்துவரும் போர் வெற்றிகரமாகத் திரும்பி விட்டது. மேற்குப் போர்முனை பூராவிலும் பலமான தாக்குதலுக்கு ஏற்பாடு செய்யப்

பட்டு வருகிறது. ஜெர்மனியிலுள்ள போக்குவரத்து மார்க்கங்களைச் சின்னா பின்னப்படுத்தும் விமானத் தாக்குதலும் ஏற்பாடாக இரவு பகலாக நடைபெற்று வருகின்றன. எந்த இடத்திலும் ஜெர்மன் படைகள் முன்னேறித் தாக்கும் சக்தி பெற்றிருக்கவில்லை.

மேற்கிலும், கிழக்கிலும் குறைவுபட்டுவரும் படை பலத்துடனும் தளவாடங்களுடனும் ஜெர்மானியர்கள் தற்காப்பு யுத்தத்தை நடத்தி வருகிறார்கள்.

எவ்வளவு காலத்துக்கு ஜெர்மனி அதன் அதோகதியை ஒத்திவைக்க முடியுமென்பது தான் தற்போதிய முக்கியமான பிரச்னை. சிறு பிள்ளைகளையும், விருத்தர்களையும் சேனையில் சேர்த்துக்கொள்ளுவதினால் இறுதி நாசத்தை ஒத்தி வைக்கலாமே ஒழிய அதைத் தடுத்து விடமுடியாது. போரைச் சீக்கிரத்தில் முடிப்பதும், மத்திய ஐரோப்பாவை விடுவிப்பதும் ஜெர்மன் பொதுஜனங்கள் உள்பட எல்லோரையும் நாஸிகளின் அக்கிரமத்திலிருந்தும், கொடுமையிலிருந்தும் விடுவிப்பதும்தான் நேசதேசத்தார்களின் யுத்த தந்திர லக்ஷியம். 1944-ம் வருஷத்தில் பாக்கியுள்ள இரண்டு மாதங்களில் அநேக சம்பவங்கள் நேரிடக்கூடும்.

இவ்விதமாக ஐரோப்பாவிலும், தூரக்கிழக்கிலும் எதிரிகளின் அந்திய காலம் சமீபித்து விட்டது. ஜப்பானுக்கு கடற்போர் தோல்வி மகத்தான பீதியை உண்டுபண்ணிவிட்டது. ஜெர்மனியைக் காட்டிலும் அதிக காலம் ஜப்பான் சமாளித்து நிற்கும். ஆகிலும் இரு நாடுகளும் அவைகளின் வீழ்ச்சியைத் தடுக்க முடியாது. இவ்விதமாக அக்கிரமப் போரை நடத்துவதை உலகத்தில் தலைகாட்டாமல் தடுக்க இதுவரையில் நேசதேசத்தார்கள் இவ்வளவு தீர்மானத்துடன் இருந்ததில்லை.

குவாமில் ஜப்பானியரின் அட்டூழியம்.
பொதுஜனங்களின் நிலைமை.

குவாமை ஜப்பானியர் ஆக்கிரமித்திருந்தபொழுது அநேக ஸ்திரீகள் கற்பழிக்கப்பட்டார்கள். அநேக பொதுஜனங்கள் கொலை செய்யப்பட்டார்களென்று மார்னிங் ஹெரால்டின் மத்திய பஸிபிக் நிருபர் எழுதுகிறார்.

ஜப்பான் ஆக்கிரமணம் செய்த முதல் வாரங்களில் ஜப்பானின் காட்டுமிராண்டித்தனமான நடவடிக்கைகளைப் பற்றி விடுதலை பெற்ற சாமோரான்கள் விவரித்தார்கள். அமைதி ஏற்படுமுன் அநேக அக்கிரமங்கள் நடைபெற்றன. இறுதிவரையில் கொடுமைகள் ஓயவில்லை.

சூமே நகரத்திலிருந்து 30 ஸ்திரீகள் கொண்டுபோகப்பட்டு துருப்புகளின் புணர்ச்சிக்காக ஒரு வீட்டில் அடைக்கப்பட்டிருந்தார்கள். கள் குடித்த தனிப்பட்ட ஜப்பானியத் துருப்புகள் தெருக்களில் நடமாடி சாமோரானியரின் வீடுகளுக்குள் நுழைந்தனர்.

அமெரிக்க கடற்படையிலுள்ள பீடர் டோமானின் மனைவியான ரோஸாலி டோமான் மலைகளிலிருந்த அவளுடைய புருஷனுக்கு உணவு கொண்டுபோவதாகக் கண்டுபிடிக்கப் பட்டாள். இருவர்களும் கொலைசெய்யப்பட்டார்கள். இந்தக் கொலைகள் புதைகுழிகளிருக்கும் இடத்திலேயே நடைபெற்றன. அவர்கள் தங்களுடைய சவக் குழிகளை தாங்களே தோண்டிக் கொண்டார்கள். இந்த நடவடிக்கையை சாமோரான்கள் உற்று நோக்க வேண்டுமாம். ஆனால் சமோரான்கள் வீட்டிலேயே தங்கியிருந்து பிரார்த்தனை செய்தார்கள். அவர்கள் கொலை செய்யப்பட்டார்களென்பதை வின்ஸண்ட் மோஸ் ஊர்ஜிதம் செய்தார்.

ஜப்பானியர்களைத் திருப்தி செய்யாத பொது ஜனங்களை ஜப்பானியர்கள் நடத்திய முறையை நீரஸஸ் பார்னினஸ் என்ற ஸ்கூல் டீச்சர் விவரித்தார். ஜப்பானியர்களின் பொது ஜனக் காரியாலயத்தைத் தாண்டிச்சென்றபொழுது ரோஸா பாஸா என்ற மாது சாமோரான் வழக்கப்படி நாக்கைத் துருத்திக்கொண்டு ஸ்நேகபாவத்தை வெளிக்காட்டினாள். ஜப்பானியர்கள் அவளை உள்ளே அழைத்துச் சென்று அவளை அசையாமல் நிற்கும்படி செய்து அவளுடைய நெற்றியிலும், காதுக்குப் பின்புறத்திலும் உறைவாளால் காயப்படுத்தினார்கள்.

சமீப காலத்தில் மூன்று சாமோரான்கள் கொலை செய்யப்பட்டார்கள். அவர்கள் வெளி உலகத்தாருடன் சம்பாஷணை நடத்தாமல் தடுப்பதற்காக அவர்கள் கொலை செய்யப் பட்டார்களென்று சொல்லப்படுகிறது.

ஜப்பானியருக்குச் சைனாவின் எதிர்ப்பு.
நேசதேசத்தாருக்கு உபயோகம்.
(டைம்ஸ் பத்திரிகை).

உலக சுதந்திரத்துக்காக நடைபெற்று வரும் போரில் சைனா விசேஷப் பங்கு எடுத்துக் கொண்டதுபோல் எதிர்காலத்தில் உலக சீர்திருத்தத்தை அமைப்பதிலும், பராமரிப்புச்

செய்வதிலும் சைனா முக்கியத்துவமுள்ள பங்கெடுத்துக்கொள்ளும். ஏழு வருஷங்களாக நம்பத்தகாத கஷ்டங்களை அனுபவித்து சைனா ஜப்பானின் தாக்குதல்களையும், அதன் நயவஞ்சகத்தையும் எதிர்த்துப் போராடியிருக்கிறது. இந்த எதிர்ப்பு நேசதேசத்தாரின் அதிருஷ்டவசமாக அதன் ஐதீக விசேஷங்களுடன் நின்றுவிடவில்லை. ஜப்பானைப்போன்ற சக்தி வாய்ந்த, அயோக்கியத்தனமுள்ள, தேசீய வாழ்க்கையை அக்கிரமப் போருக்கு ஈடுபடும்படி செய்யக்கூடிய ஒரு நாட்டுடன் தற்காப்பு யுத்தத்தை வெற்றிகரமாக நடத்த ராஜீய முறையிலும், ராணுவ முறையிலும் சைனாவில் போதுமான முஸ்தீப்புகள் இல்லை.

சீனக் குடியரசு ஆட்சி புராதனமான மாகாண ஆட்சியிலிருந்து நவீன முறையில் ஒன்றுபட்ட தேசீய ஆட்சி முறையை ஏற்றுக்கொண்டிருக்கும் சமயத்தில் ஜப்பான் சீனாவைத் தாக்கிற்று. பூர்ணமான யுத்தத்தை நடத்த நிர்வாகத்தினால் உத்தரவிடப்பட்டு ஏற்பாடு செய்யப்பட்ட ஸ்தாபனங்களையுடைய ஒரு நாட்டுடன் போர் தொடுக்க சைனாவின் ஐதீகமான கலைஞான ஒற்றுமையும், ராஜீய, ராணுவ முறையில் ஒரு சாதகத்தையும் அளிக்கவில்லை. சுதந்திர சைனா இது வரையில் நிலைபெற்றிருப்பதற்கு தலைவர் சியாங் கே ஷேக்கின் சோர்வடையாத ஊக்கமும், நெருக்கடி சமயத்தில் நிலைமை மோசமானபொழுதும் அவருடைய நெஞ்சுரப்பும், அவருக்குக் கிடைத்த உள்நாட்டு, அயல்நாட்டு, ஐஸ்வர்யங்களைத் திறம்பட உபயோகிக்கும் சக்தியும்தான் காரணங்களாகும்.

இவ்விதமாக சைனா நேசதேசத்தாருக்குச் செய்த அரியசேவை மதிப்பிடக்கூடியதல்ல. ஜப்பானியரின் கெட்ட எண்ணத்தை எதிர்த்துப் போராடி சீனரின் மனஉறுதிதான் கிழக்கு உலகம்பூராவிலும் ஆசியா, ஆசியா கண்டத்தவருக்கே என்ற மேற்கோளை தங்குதடையன்னியில் பரவிவிடாமல் தடுத்துவிட்டது. ஜாதி விரோதங்களால் பீடிக்கப்பட்ட உலகத்தில் கிழக்கிலும், மேற்கிலும் ஒற்றுமையை நிலைநாட்டக்கூடிய வகையில் ஏழு வருடங்களாகப் போர் புரியும் பாக்கியம் சைனாவுக்குத்தான் கிடைத்தது. சமீப காலங்களில் மேற்கு நாடுகளிலுள்ள சில உற்று நோக்காளர்கள் சைனாவின் நீண்ட கால எதிர்ப்பைப் பாராட்டுவதைவிட்டுவிட்டு அதன் ராணுவத் தோல்விகளைக் கண்டனம் செய்ய முற்பட்டுவிட்டார்கள். சைனாவின் தீரத்தின் உருவெடுத்தவர் என்று போற்றப்பட்ட ஜெனராலிஸிமோ பிரெஸிடெண்ட் இப்பொழுது ஜனநாயகத்தின் தலைவராக சமாளிக்க முடியவில்லையென்று குற்றம் சாட்டப்படுகிறார்.

எல்லா அம்சங்களிலும் சைனா மேற்கு நாட்டு வல்லரசுகளின் நடவடிக்கைகளில் ஒற்றுமை கொண்டிருந்ததால் அதன் நாயகத்தை தூரக்கிழக்கு நாடுகள் அனுதாபத்துடன் ஏற்றுக்கொண்டிருக்கமாட்டார்கள் என்ற சாதாரணமான விஷயத்தை அவர்கள் கவனிக்காததினால்தான், அவர்கள் இவ்விதமான சுலபமான முடிவுக்கு வந்திருக்கிறார்களென்று சொல்லவேண்டியிருக்கிறது. ராஜீய பிரச்னைகளையும், அதன் சொந்த விஷயத்தையும் வித்தியாசத்துடன் சைனா பாராட்டிவருவதினால்தான் சைனா தற்போதிய யுத்தத்தில் நேசதேசத்தாருடன் சேர்ந்து போராடுவதில் உலகத்தின் எதிர்கால க்ஷேமத்திற்கு அதிக முக்கியத்துவம் பொருந்தியிருக்கிறது.

ஜப்பானை அநேக வருடங்களாக சைனா எதிர்த்துப் போராடி வந்திருப்பதால் தூரக்கிழக்கு நாடுகள் அதைப் பின்பற்றி செல்லக்கூடிய ஒரு ஸ்தானத்தை சீனா வகிக்கும் நிலைமையை அடைந்துவிட்டது. தேசத்தின் விடுதலைக்காக நடைபெறும் போரில் மனிதனால் சகிக்கக்கூடிய அளவுக்கு அது சகிப்புத்தன்மையுள்ளதென்று சீனக்குடியரசுக் கட்சி வெளிப்படுத்திவிட்டது. எதிர் காலத்தில் பொதுவான ஏற்பாட்டில் தனிப்பட்டவர்களின் ஸ்வதந்திரத்தையும், தேசத்தின் ஒற்றுமையையும் அது வளர்ச்சிக்கக்கூடுமென்று சைனா காண்பித்துவிடும்.

யுத்தத்துக்குப்பின் உலக சீர்திருத்தம்.

14. கல்வி.

(1) மூலாதாரக் கல்வி.

சொற்பொழிவாளர்கள் :—மிஸ்டர் விக்ஹாம் ஸ்டீட் (தலைவர்).
,, ஜான் சார்ஜண்ட்.
,, S. H. உட்.

(கிழக்கு நாடுகளுக்குச் செய்யப்படும் ஒலிபரப்பு. 1944-ம் வருஷம் அக்டோபர் 23).

ஸ்டீட் : விரிவாகச் சொன்னால் கல்வி மூலாதாரக் கல்வி, ஸெகண்டரி கல்வி என்று இரு வகைப்படும். ஆகிலும் முக்கியமானது மூலாதாரக் கல்விதான். அதை இன்று சர்ச்சை செய்வோம்.

மூலாதாரக் கல்வியைப்பற்றி இந்தியா என்ன செய்திருக்கிறதென்று பிரிட்னிலுள்ளவர்களுக்கு ஒன்றும் தெரியாது. உட், தாங்கள் இந்தியாவில் பிரிடிஷ் கல்வி போர்டின் பிரதிநிதியாக இருந்தீர்களல்லவா? இந்தியாவைப்பற்றி உங்களுடைய அனுபவம் என்ன.

உட்: நான் இந்தியாவுக்குச் சென்றபொழுது அங்கு கல்வி நமது முறையை அநேகமாக ஒத்திருந்தது. அங்கு கட்டாயக் கல்வி கிடையாது. அநேக இடங்களில் பள்ளிக்கூடங்களும் அதிகமாக இல்லை. ஆகிலும் மூலாதாரக் கல்வி அநேக வருஷங்களாகப் பரவி கல்வியின்மையை ஒழிக்க முற்படவில்லை.

ஸ்டீட்: இதற்குக் காரணம் நடைமுறைக் கல்வி அந்நாட்டிற்கு ஒவ்வாததென்பதென்று சொல்லுகிறீர்களா?

உட்: பள்ளிக்கூடத்திலிருந்து வெளியேறியபின் குழந்தைகள் கல்வியை வளர்ச்சி செய்து வராததற்கு, இந்தியாவில் கல்வியைப் பிள்ளைகள் மனப்பாடம் செய்வதுதான் காரணமாகும். குழந்தைகளுக்கு அளிக்கப்படும் கல்வியில் நடைமுறையில் குழந்தைகளுக்கு உபயோகப்படக்கூடிய ஒரு அம்சமும் கிடையாது.

ஸ்டீட்: பிரிடனிலும் பள்ளிக்கூடத்திற்குச் சென்று எழுதப்படிக்கத்தெரிந்தபின் பிற்காலத்தில் அவைகளை மறந்துவிட்டார்களில்லையா?
சார்ஜண்ட், இந்தியாவின் கல்வியைப்பற்றி நீங்கள் ஆராய்ச்சி செய்தீர்களே. உங்களுடைய அபிப்பிராயம் என்ன?

சார்ஜண்ட்: இந்தியாவில் 5 முதல் 14 வயதுக்குட்பட்ட குழந்தைகள் 60 மிலியன் இருக்கின்றன. யுத்தத்துக்குமுன் இந்த வயது காலத்தை கட்டாயக் கல்வி வருஷங்கள் என்று இங்கிலாந்தில் நினைத்திருந்தோம். அவர்களில் ஒன்பதில் இருவர்களான பையன்கள் பள்ளிக்கூடத்திற்குச் செல்லுகிறார்கள். முதல் வருஷத்திற்குப்பின் அவர்களில் பாதி பாகம் பள்ளிக்கூடத்தை விட்டுவிடுகிறார்கள். நான்காவது வருஷ முடிவில் நான்கில் ஒருவர்தான் பள்ளிக்கூடத்திலிருந்து வருகிறார்கள். சாதாரணமான குழந்தைகளுக்கு மூலாதாரக் கல்வி ஏற்படுவதற்கு இதுதான் பக்குவமான காலம்.

ஸ்டீட்: பெற்றோர்கள் குழந்தைகளுக்குக் கல்வி கற்றுக்கொடுப்பதில் பயனுண்டென்று நினைக்கிறார்களா?

சார்ஜண்ட்: ஆம். இந்தியாவில் கல்வி ஓங்காததற்கு அநேக காரணங்கள் உண்டு. பொருளாதார நிலைமைதான் முக்கியமானது.

ஸ்டீட்: குழந்தைகளின் கல்விக்காக பெற்றோர்கள் பொருளைச் செலவிடவேண்டியிருக்கிறதென்று சொல்லுகிறீர்கள்.

சார்ஜண்ட்: மூலாதாரக் கல்விப் பள்ளிக்கூடங்களில் சம்பளம் இல்லாவிட்டாலும், பெற்றோர்கள் குழந்தைகளுக்கு புஸ்தகம், பென்சில், சிலேட் முதலியவற்றை வாங்கிக்கொடுக்க வேண்டியிருக்கிறது. சொல்ப வரும்படி உள்ள ஜனங்களுக்கு இது ஒரு பாரமாகயிருக்கிறது.

ஸ்டீட்: கிராமத்திலுள்ள ஒரு குடும்பத்துக்குச் செலவு வருஷத்துக்கு ரூ. 150-க்கு மேலாகாதென்று நான் கேள்விப்பட்டிருக்கிறேன். அந்தத் தொகையில் ரூ. 10-ஐ எடுத்துவிட்டாலும் அது பொருட்டாகுமல்லவா?

சார்ஜண்ட்: சில பெற்றோர்களுக்கு இது தாங்கக்கூடியதாக இல்லை. அவசியமான தளவாடங்களில்லாததால் அநேகம் குழந்தைகள் பள்ளிக்கூடத்தில் தங்களுடைய வேலைகளைச் செய்யமுடியவில்லை.

ஸ்டீட்: சற்றுப் பொறுங்கள். உட், பள்ளிக்கூடங்களை நடத்துவதற்கும், அதன் சிப்பந்திகளுக்கும் யார் பொருளுதவி செய்துவருகிறார்கள்? உபாத்தியாயர்களுக்கு யார் சம்பளம் கொடுக்கிறார்கள்?

உட்: அநேக ஸமஸ்தானங்கள் அதன் செலவைப் பொருத்துக்கொள்ளுகின்றன. மாகாண கமிட்டிகள் சிலவற்றிற்குப் பொருளுதவி செய்கின்றன. மத்திய நிர்வாகம் கிராண்டுகளைக் கொடுத்துதவுகிறது. இது ஒரு சாதாரணமான விவரணம்.

சார்ஜண்ட்: இந்தியா நிர்வாகம் தனிப்பட்ட சங்கங்கள் பள்ளிக்கூடங்களை ஸ்தாபிக்கச் செய்து அவைகளுக்குப் பொருளுதவி செய்கிறார்களே ஒழிய தாங்களாகப் பள்ளிக்கூடங்களை ஏற்படுத்துவதில்லை.

ஸ்டீட்: பாஷை வேறுபாடு ஒரு இடையூறாக இருக்கிறதா?

சார்ஜண்ட்: ஆம். இதற்காக சில பள்ளிக்கூடங்களில் வெவ்வேறு வகுப்புகளை அமைக்க வேண்டியிருக்கிறது.

ஸ்டீட்: இந்த நாட்டில் மூன்று R.-கள், அதாவது படிப்பது, எழுதுவது, கணிதம் மூன்றும் சொல்லிக்கொடுப்பதுதான் மூலாதாரக் கல்வியின் நோக்கம். இந்தியாவில் கல்வியின் லக்ஷியம் என்ன?

உட்: இந்நாட்டில் இந்த லக்ஷியம்தான் முக்கியம் என்பதில்லை. அது ஒரு பாகமாக இருந்த போதிலும் ஆரம்பக்கல்வியில் குழந்தையின் வயதுக்குத் தக்கபடி கல்வியும் நடவடிக்கைகளும் கற்றுக்கொடுக்கப்பட்டிருக்கின்றன. இந்த திட்டத்தில் பாட்டு, நாட்டியம், தொழில் இன்னும் அநேக முறைகள் கற்பிக்கப்பட்டு வருகின்றன. இந்தியாவில் குழந்தையின் சந்தோஷத்துக்குரிய நடவடிக்கைகளைக் கற்றுக்கொடுக்காமல் மூன்று R. களையும் கற்றுக்கொடுப்பதில் கவனம் செலுத்தி வருகிறார்கள்.

சார்ஜண்ட்: நான் இதை ஆமோதிக்கிறேன். பள்ளிக்கூடமென்பது குழந்தைகள் வாழ்க்கை முறையை நடத்திவருவதற்கும், விளையாடுவதற்கும், சந்தோஷமாக இருப்பதற்கும் அர்கதையுள்ள ஸ்தலங்கள் என்ற அபிப்பிராயத்தை இந்தியர்கள் அறிந்துகொள்ளவில்லை. பள்ளிக்கூடங்களிலுள்ள இந்தியக் குழந்தைகள் சந்தோஷமாகயிருப்பதைவிட விசனப்படுகிறார்கள். உட், உன்னுடைய அபிப்பிராயம் என்ன?

உட்: என்னுடைய ரிப்போர்ட்டில் கல்வி என்பது சந்தோஷமென்று நான் எழுதியிருக்கிறேன். அதையே லக்ஷியமாகக் கொண்டால் அதை அடையமுடியாது. திருப்தியான நடவடிக்கையிலிருந்துதான் இந்தக் கல்வி அறிவு ஏற்படும்.

ஸ்டீட்: இது அரிஸ்டாடிலின் கொள்கையல்லவா? ஆகிலும் இந்தியாவில் 1066-ம் வருஷத்திய நார்மன் வெற்றியைப்பற்றியும், மாக்னகார்டாவையும் பற்றிப் படிக்கிறார்களா? அல்லது இந்தியர்களுக்கு ருசிகரமான விஷயங்கள் கற்றுக்கொடுக்கப்படுகின்றனவா?

உட்: ஆரம்பக்கல்விப் பள்ளிக்கூடங்களில் ஆங்கிலத்தில் போதனையே கிடையாது. ஆங்கில பாஷையில் ஒரு பாகமும் கிடையாது. இந்தியாவைப்பற்றிய விஷயங்கள்தான் கற்பிக்கப்படுகின்றன.

சார்ஜண்ட்: நான் அநேகமாக ஒப்புக்கொள்ளுகிறேன். உள்நாட்டு பூகோளம்தான் போதிக்கப்படுகிறது. உள்நாட்டுப் படங்களுடன் ஆரம்பித்து அதைச் சுற்றியுள்ள ஜில்லா, மாகாணம் முதலியவற்றைப் பற்றித்தான் பாடம் சொல்லிக்கொடுக்கப்படும். ஆரம்பத்திற்கு இது சரியான முறைதான். ஆனல் ஆரம்பக் கல்வியில் அதற்குமேல் போக முடியாது. இந்திய சரித்திரம்தான் சொல்லிக்கொடுக்கப்படுகிறது.

ஸ்டீட்: இந்தியப் பள்ளிப் பிள்ளைகள் சந்தோஷமாக இல்லையென்று இருவர்களும் சொன்னதற்கு காரணம் யாது?

உட்: அவர்கள் வருத்தப்படுவதற்கு இருகாரணங்கள் உள. முதலாவது, போஷணைக் குறைவு. இரண்டாவது, பள்ளிக்கூடத்தின் லக்ஷியம் சரியாக மதிக்கப்படாதது. பள்ளிக்கூடத்தில் குழந்தையின் வயதுக்குத் தக்கவாறு புத்தியும், தேகமும் விரிவடைய வேண்டும். இந்தியப் பள்ளிக்கூடங்களில் புத்தி விசாலம் ஏற்படுகிறதே ஒழிய தேகப் பயிற்சி ஏற்படுவதில்லை. குழந்தைகளுக்கு விளையாட்டுகளும், பொழுது போக்குகளும், குழந்தைகளின் அங்கங்களை அப்பியாசம் செய்யக்கூடிய முறைகளும் காணப்படவில்லை. இந்திய கிரிகெட் கோஷ்டிகளும், ஹாக்கி கோஷ்டிகளும் நம்முடைய ஹைஸ்கூல் கோஷ்டிகளுடன் சமமாக நின்று போராடி விடுவார்கள். ஆகிலும் ஆரம்பக்கல்வி காலத்தில் குழந்தைகளுக்குப் போதுமான விளையாட்டு ஏற்பாடு செய்யப்படவில்லை.

சார்ஜண்ட்: இந்தியாவில் பல வேறு வகைப்பட்ட பள்ளிக்கூடங்கள் இருக்கின்றன. பள்ளிக்கூடத்திலும், அதற்கு வெளியிலும் உள்ள தங்களுடைய பொறுப்பை அறியக்கூடிய உபாத்தியாயர்களின் பள்ளிக்கூடங்கள் இல்லையென்று சொல்லுவது ஞாயமல்ல. இடவசதி குறைவுதான் முக்கியமான இடுக்கண். டவுனிலுள்ள பள்ளிக்கூடங்களுக்கும், கிராமத்திலுள்ள பள்ளிக்கூடங்களுக்கும் விளையாட்டு ஸ்தலங்களே கிடையாது.

ஸ்டீட்: இதற்கும் ஏழ்மைத்தனம் தான் காரணமா? அது எவ்விதமிருப்பினும் இந்தியா உயர்தரமான வாழ்க்கை முறையை அடைய வேண்டுமானல் அங்கு மூலாதாரக் கல்வி அவசியமாகும். அதற்காக உபாத்தியாயர்கள் வேண்டும். அவர்களுக்குப் பயிற்சி யார் அளிக்கிறார்கள்? அவர்களை நியமிப்பது யார்?

சார்ஜண்ட்: சரியானபடி அதைச் சொல்லவேண்டுமானல் அதிக காலம் பிடிக்கும். மேலும் அது பலவிதமாக இருக்கிறது. அநேக மாகாணங்களில் மூலாதாரக் கல்வி உள் நாட்டு

சங்கங்களிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. சில கேஸ்களில் அவர்களிடம் நியமனம் அதிகாரம் இருக்கிறது. சில இடங்களில் அந்த அதிகாரம் வழங்கப்படவில்லை. அதிகாரமும் நல்ல முறையில் செலுத்தப்படுவதில்லை. கல்வியில் முன்னேற்றமடைய வேண்டுமானால், உபாத்தியாயர்களின் நியமனம், மாற்றுதல், பர்த்தரப்பு முதலிய அதிகாரங்களை நாம் வகிக்க வேண்டுமென்று தேசிய நிர்வாகங்கள் நினைத்தன. 40 சதவிகிதம் உபாத்தியாயர்களுக்கு பயிற்சியே கிடையாது.

ஸ்டீட்: உபாத்தியாயர்களுக்குப் பயிற்சியளிக்கும் கல்லூரிகளிருக்கின்றனவா? அப்படியானால் அவைகளுக்கு கலாசாலை பட்டம் பெற்றவர்கள் தலைமை வகிக்கிறார்களா?

சார்ஜண்ட்: பயிற்சிப் பள்ளிக்கூடத்துக்கும் பயிற்சி சர்வகலாசாலைக்குமுள்ள வித்தியாசத்தை நாம் கவனிக்க வேண்டும். பயிற்சி கலாசாலையில் பணம் பெற்றவர்கள் ஒரு வருஷம் பயிற்சி பெற்று ஹைஸ்கூல்களுக்குப் பாடம் கற்பிக்கிறார்கள். ஆரம்பக் கல்விப் பள்ளிக்கூட ஆசிரியர்களுக்கு அளிக்கப்படும் பயிற்சி மட்டமானது.

ஸ்டீட்: இந்தியாவில் மூலாதாரக் கல்வியை அபிவிருத்தி செய்ய என்ன செய்யவேண்டும்.

உட்: உபாத்தியாயர்களுக்கு வருஷா வருஷம் ரிப்ரெஷர் வகுப்புகள் வைக்கப்படவேண்டும். ஏனெனில் அவர்கள் வேலைபார்க்கும் பள்ளிக்கூடங்கள் ஜன சமூக வாழ்க்கையிலிருந்து வெகுதூரம் தள்ளி இருக்கின்றன. உயர்வான யோக்கியதையுள்ள உபாத்தியாயரும் நல்லெண்ணம் கொண்டிருந்தாலும், நாளடைவில் ஊக்கத்தை இழந்து மனச்சோர்வு அடைந்துவிடுகிறான். அவனைப் பயிற்சி பள்ளிக்கூடத்திற்கு சிறிதுகாலம் மறுபடியும் அனுப்பினால் அவனுடைய ஊக்கம் அதிகப்படும். இந்தியாவின் கல்வி அபிவிருத்திக்கு நிறுவப்பட்ட புதிய திட்டத்தில் விரிவான ரிப்ரெஷர் வகுப்புகளை ஏற்படுத்துவதும் ஒரு அம்சமா?

சார்ஜண்ட்: ரிப்ரெஷர் படிப்பைப்பற்றிப் பேசுமுன் நாம் சரியான உபாத்தியாயரைத் தேர்ந்தெடுக்கவேண்டும். இந்தியாவில் கொடுக்கப்படும் ஊதியத்தைக்கொண்டு சரியான உபாத்தியாயர்களைப் பொறுக்கியெடுக்க முடியுமென்று எனக்குத் தோன்றவில்லை. ஸர்க்கார் ஆரம்பக்கல்விப் பள்ளிக்கூடங்களில் உபாத்தியாயருக்கு சராசரி மாதம் ரூ. 7 சம்பளம் வழங்கப்படுகிறது. இதர சொந்தப் பள்ளிக்கூடங்களில் அதைவிடக் குறைவாக இருக்கிறது. இந்தியாவின் மிகப்பெரிய மாகாணமொன்றில் மாதம் ஒன்றுக்கு ரூ. 8—3—0 தான் சம்பளம் கொடுக்கப்படுகிறது. இந்தச் சம்பளத்திற்கு சரியான உபாத்தியாயர்கள் வரமாட்டார்கள். அவ்விதம் சரியான உபாத்தியாயர்களைத் தேர்ந்தெடுத்துவிட்டால் ரிப்ரெஷர் வகுப்புகளை ஏற்படுத்தவேண்டியது அவசியம்தான்.

உட்: இந்தியாவிலுள்ள டீச்சர்களுக்கு அதிக கௌரவம் கிடையாது.

சார்ஜண்ட்: உபாத்தியாயர்களுக்கு அதிக கௌரவம் ஏற்பட்டிருந்த இந்தியாவில் இந்த நிலைமை காணப்படுகிறது.

ஸ்டீட்: இந்தியாவின் கல்வி பிரச்னை உபாத்தியாயர்களின் சம்பளத்தைப் பொருத்திருக்கிறதல்லவா?

சார்ஜண்ட்: ஆம். ஆண்பிள்ளை உபாத்தியாயர்களைவிட பெண்பால் உபாத்தியாயர் பிரச்னைதான் மிகவும் சிக்கலானது.

ஸ்டீட்: சரி. நமக்கு பயிற்சி கலாசாலைகள் அவசியம். அந்தக் கலாசாலையிலுள்ள ஆசிரியர்களுக்கு ஸெகண்டரி, மூலாதாரக் கல்வி ஏற்பட்டிருக்கவேண்டும்.

சார்ஜண்ட்: மூன்று வருஷங்களுக்கு முன் கல்வி இலாகாவின் மத்திய ஆலோசனை சங்கம் ஒரு கமிட்டியை அமைத்து, பிரிடனில் பர்ன்ஹாம் கமிட்டிகள் இருபது வருஷங்களாகச் செய்துவந்த வேலையை அந்தக் கமிட்டி ஒரு சில நாட்களுக்குள் செய்யமுயன்றது. அந்தக் கமிட்டி ஆரம்பக்கல்வி, நடுத்தரக்கல்வி, ஹைஸ்கூல் பள்ளிக்கூடங்களிலுள்ள உபாத்தியாயர்களின் பயிற்சி, நியமனம், ஊதியம் முதலியவற்றைப்பற்றி சில விதிகளை ஏற்படுத்தினார்கள். இந்த விதிகள் சாதாரணமாக இருந்தபோதிலும் அவைகள் இந்திய உபாத்தியாயர்களின் அந்தஸ்தை அதிகரிக்கப் போதுமானதாக இருந்தன. துரதிருஷ்டமாக அந்த திட்டங்களையும், இந்தியாவிலுள்ள எந்த நிர்வாகமும் இதுவரையில் ஒப்புக்கொள்ளவில்லை.

ஸ்டீட்: மத்திய நிர்வாகமும், மாகாண நிர்வாகங்களும் உபாத்தியாயர்களை கௌரவித்தால் அவர்களின் ஜனசமூக அந்தஸ்து உயர்ந்துவிடாதா?

சார்ஜண்ட்: மிகுதியாக உயர்ந்துவிடும். ரிபோர்ட்டில் கிராம உபாத்தியாயருக்கு வீடு கட்டிக்கொடுக்கவேண்டுமென்று அந்த போர்டு சிபார்சு செய்தது. அவருக்கு கிராமத்தில் நல்ல வீடு இருந்தால் அவருடைய அந்தஸ்து அதிகரிக்கும்.

ஸ்டீட்: உபாத்தியாயர்களுக்கு நல்ல சம்பளமும், ஜன சமூகத்தில் சரியான அந்தஸ்தும் கொடுக்கப்பட்டாலும் வாழ்க்கையில் அவர்களுக்குள்ள தோற்றமும் ஒரு பிரச்னையாகும். நான் ராஜீய அபிப்பிராயத்தைக் குறிப்பிடவில்லை. மேற்கு நாடுகளிலிருப்பதுபோல் இந்தியாவிலும் முன்னேற்றமேற்படுமென்று அவர்கள் நினைக்கிறார்களா என்பதுதான். விரிவான கல்வி அறிவு ஏற்பட்டால் கல்வியை அபிவிருத்தி செய்வதற்கும், சமூகத்துக்கு உதவியளிப்பதற்கும் மார்க்கம் ஏற்படுமென்று அவர்களுக்குத் தோன்றுமா? இது சாத்தியமென்று நினைக்கிறீர்களா?

சார்ஜண்ட்: நாம் இதைத்தான் எதிர் பார்க்கிறோம். 7 அல்லது 8 வருடங்களுக்கு முன் மிஸ்டர் காந்தி நிறுவிய வார்தாக் கல்வி திட்டத்திலும் இவைகள்தான் முக்கியமாக அடங்கியிருந்தனவென்று சொல்லவேண்டும். உட், சொல்லுவதுபோல கல்வி ஆரம்பத்தில் அது குழந்தைகள் வசித்துவரும் சந்நிவேசத்திற்கு ஒத்ததாக இருக்கவேண்டுமென்று எல்லா கல்வி அறிவாளர்களும் ஒப்புக்கொள்ளவேண்டியதுதான். மேலும் உபாத்தியாயர் அந்தந்த ஊரிலுள்ள கைத்தொழில்களில் தேர்ச்சி பெற்றிருக்கவேண்டும். அவனுடைய பள்ளிக்கூடத்தில் அந்தக் கைத்தொழில்கள் கற்றுக்கொடுக்கப்படவேண்டும்.

ஸ்டீட்: வார்தா திட்டம் நூல் நூற்கும் முறையுடன் நின்றுவிடவில்லையா?

சார்ஜண்ட்: இல்லை. வார்தா திட்டம் கைராட்டையைத் தான் முக்கியமாக ஆதரிக்கிறதென்று சொல்லுவது ஞாயமற்றது. நூல் நூற்பதுடன் நிறுத்திக்கொள்ளவேண்டுமென்று அந்தத் திட்டத்தை ஆதரிக்கிறவர்கள் உத்தேசிக்கவில்லை. ஆனால் மகாத்மாவின் சில உத்சாகமுள்ள சிடர்கள் மற்ற கைத்தொழில்களைவிட நூல் நூற்பதைத்தான் ஆதரிக்கவேண்டுமெண்டு வற்புறுத்துகிறார்கள். அடிப்படைக் கல்வி என்று மத்திய போதனை சங்கம் சொல்லும்பொழுது கைத்தொழில்களின் முக்கியத்துவத்தை அறியும்படியாக உபாத்தியாயர்களுக்குப் பயிற்சி அளிக்கப்படவேண்டுமென்று பொருள்படுகிறது.

ஸ்டீட்: உட், இவைகளைப்பற்றி நீ அதிக அனுபவம் உள்ளவராகையினால் நீர் இது விஷயத்தில் பொருளை எவ்விதம் செலவு செய்வீர்கள்?

உட்: முதலில் குழந்தைகளுக்குக் கல்வி பயில்விக்க ஸ்திரீ ஆசிரியர்களை நியமிக்க வேண்டும். இரண்டாவதாக ஆரம்பக்கல்விப் பள்ளிக்கூடங்களில் இவ்வளவு நேரம் தான் உட்கார்ந்தபடியே மாணுக்கர்களுக்கும் கல்வி பயில்விக்கவேண்டுமென்று வரையறுக்கப்படவேண்டும். சிலமணி நேரங்களாவது குழந்தைகள் சில கைத்தொழில்களைச் செய்து வரவேண்டும். மூன்றுவதாக, நாளில் குறிப்பிட்ட நேரத்தில் அவர்கள் விளையாடவேண்டும். சிறிய குழந்தைகளுக்கு ஏற்பட்ட விளையாட்டுகள் தேவையில்லை. வரவர அவர்கள் ஏற்பாடான விளையாட்டுகளில் ஒரு குறிப்பான லக்ஷியத்துடன் கலந்துகொள்ள வேண்டும். இந்தியாவில் இளம் பிராயமுள்ள வளர்ச்சிபெறக்கூடிய குழந்தைகளுக்கு அவர்களுடைய தேவைக்கு அனுசரணையான கல்வி இல்லையென்று தான் நான் சொல்லவேண்டியிருக்கிறது.

சார்ஜண்ட்: உன்னுடைய யோஜனை சிலாக்கியமானது. ஸ்திரீ ஆசிரியர்கள் அவசியமென்பதையும் நான் ஒப்புக்கொள்ளுகிறேன். ஆகிலும் உபாத்தியாயர்களாகப் பயிற்சி அளிக்குமுன் பெண் பிள்ளைகளுக்குக் கல்வி பயில்விக்க வேண்டும். ஹைஸ்கூல்களில் படிக்கும் பெண்கள் ஒரு சிலரைத் தவிர மற்றவர்கள் மத்தியதர அல்லது உயர்தர வகுப்பைச் சேர்ந்தவர்கள். அவர்கள் உபாத்தியாயர் தொழிலை ஏற்றுக்கொள்ள சம்மதிக்க மாட்டார்கள். எல்லோருக்கும் கல்வியைப் பயில்வித்து ஏழைக் குடும்பங்களிலுள்ள ஸ்திரீகளும் ஹைஸ்கூல்களில் படித்து வரவேண்டும். அவர்களுக்கும் நல்ல சம்பளமும், பயிற்சியும் அளிக்கப்படவேண்டும். அவ்விதம் செய்தாலொழிய ஸ்திரீ ஆசிரியர்கள் போதுமான அளவிற்குக் கிடைக்கமாட்டார்கள்.

ஸ்டீட்: சரி, இந்தியாவிலுள்ள முகம்மதிய, ஹிந்து, குடும்பத்தில் தாய்மார்கள் புஸ்தக ரூபமான கல்வியை எவ்விதம் ஏற்றுக்கொள்ளுகிறார்கள்! இது நல்லதென்று நினைக்கிறார்களா?

சார்ஜண்ட்: இந்தக் கல்வி பையன்களுக்கு லாயக்கானதென்றும், பெண்களுக்கு லாயக்கில்லாததென்றும் அவள் நினைக்கக்கூடும். ஆகிலும் சமீபகாலத்தில் பெண்கள் கல்வியிலும் சிறிது அக்கரைக் காணப்படுகிறது.

ஸ்டீட்: ஆகையால் கல்வி பையன்களுக்கு உபயோகமுள்ளதென்றும், பெண்களுக்கு உதவாததென்றும் நினைக்கிருர்களா?

சார்ஜண்ட்: நீர் சொல்லுவது கல்வி கற்காத பெற்றோரைத்தான் குறிக்கிறது. ஆகிலும் பொதுப்படையாகச் சொல்லக்கூடாது. நான் முஸ்லீம்கள் அதிகமாகயிருந்த பலுசிஸ்தானத்தில் பிரயாணம் செய்த பொழுது மூலைமுடுக்கிலுள்ள கிராமங்களில் தூது கோஷ்டிகள் சந்தித்து பெண்களுக்குப் பள்ளிக்கூடம் ஏற்படுத்த வேண்டுமென்று வற்புறுத்தினுர்கள். "உங்கள் ஊரில் பிள்ளைகளுக்கே பள்ளிக்கூடமில்லையே" என்று நான் சொன்ன பொழுது "நான்கு ஐந்து மைல்கள் தாண்டி பிள்ளைகளுக்கு ஒரு பள்ளிக்கூடமிருக்கிறது. அதற்குப் பிள்ளைகள் போகக்கூடும். பெண்கள் அங்கு செல்ல முடியாது என்று பதிலுரைத்தார்கள். அவர்கள் பெண்களுக்குப் பள்ளிக்கூடம் முதலில் தேவை யென்று சொன்னது எனக்கு ஆச்சரியமாக இருந்தது.

ஸ்டீட்: மூலாதாரக் கல்வியை ஏற்படுத்துவதற்கு இந்தியாவில் மிகுதியான திறமையுள்ள உபாத்தியாயர்கள் தேவையென்று நாம் ஒப்புக்கொள்ளுவோம். அதற்குப் பொருளும், கட்டடங்களும் உபாத்தியாயர்களுக்குப் பயிற்சி அளிக்கத் தகுந்த போதகர்களும் வேண்டும். இந்தியாவில் போதகர்களும் குறைவாக இருக்கிருர்கள்.

சார்ஜண்ட்: அதைக் கவனிக்கப் பொறுப்பு வாய்ந்த அதிகாரிகள் இல்லையென்கிறீர்களா?

ஸ்டீட்: இல்லை. உபாத்தியாயர்களுக்குப் பயிற்சி அளிக்க போதகர்கள் இல்லையென்று சொல்லுகிறேன். இந்தப் பயிற்சிக்கு எவர் ஜவாப்தாரி?

சார்ஜண்ட்: அநேக இடங்களில் பயில்விக்கும் பள்ளிக்கூடங்களும், கல்லூரிகளும் மாகாண கவர்ன்மெண்டின் பராமரிப்புக்குட்பட்டிருக்கின்றன. நகரங்களில் அவைகள் முனிஸிபாலிடியின் பராமரிப்பிற்குட்பட்டிருக்கின்றன. மற்ற இடங்களில் அவைகள் ஜில்லா போர்டின் அமுலுக்குட்பட்டிருக்கின்றன. சில ஸ்தாபனங்கள் தனிப்பட்ட அல்லது அரைகுறையாகத் தனிப்பட்ட ஸ்தாபனங்களால் பொருளுதவி செய்யப்படுகின்றன. மொத்தமாகச் சொல்லும் பொழுது மாகாண நிர்வாகத்துக்குத்தான் இறுதியில் பொறுப்பேற்பட்டிருக்கிறது.

ஸ்டீட்: கல்லூரியில் எவ்வளவு பேர்கள் பயிற்சி பெறுகிருர்கள்?

சார்ஜண்ட்: பிரிடிஷ் இந்தியாவில் வருஷா வருஷம் 20,000 பேர்கள் பயிற்சி பெறுகிருர்கள். இவர்கள் ஏற்கனவே உள்ளவர்களில் நஷ்டமானவர்களுக்கு ஈடுசெய்யக்கூட போதாதவை. தேசத்தின் கல்வி முன்னேற்றத்திற்கு 2,250,000 உபாத்தியாயர்கள் தேவையாகயிருக்கும்.

ஸ்டீட்: இப்பொழுது எவ்வளவு பேர் தயாராகுகிருர்கள்.

சார்ஜண்ட்: இப்பொழுது 5 லக்ஷம் உபாத்தியாயர்கள் கிடைக்கக்கூடும். அவர்களில் 40 சதவிகிதம் பயிற்சி பெருதவர்கள். அவசியமான பயிற்சியை அளிக்க விரிவான ஸ்தாபனங்களை அமைக்கவேண்டும். ஹைஸ்கூல்களிலிருந்து புதிய நபர்கள் வேலைக்கு வரும் பொழுதுதான் இந்த சிரமம் ஏற்படும். மேலும் உபாத்தியாயர்களைப் பயில்விக்கப் போதுமான வசதிகளிருந்தாலும், ஹைஸ்கூல்களைவிட்டு வெளியேரும் பிள்ளைகள் அவர்களுக்குக் கிடைக்கக்கூடிய சம்பளத்தைக்கண்டு ஆசைப்படமாட்டார்கள்.

ஸ்டீட்: இந்த மாதிரி உபாத்தியாயர்கள் குறைவினுல்தான் இந்தியாவில் எங்கும் கல்வியைப் பரவச்செய்யத் தடங்கல் ஏற்படுகிறதா?

சார்ஜண்ட்: மூலதனமும், நல்லெண்ணமும், சகலவிதமான உதவியும் கிடைத்தாலும், உபாத்தியாயர்களைத் தேர்ந்தெடுப்பது சிரமசாத்தியமானதால் பிரிடிஷ் இந்தியாவில் 35 அல்லது 40 வருடங்களுக்குள் மூலாதாரக் கல்வியையும் ஸெகண்டரிக் கல்வியையும் ஆரம்பிக்கமுடியாது.

ஸ்டீட்: இந்த அந்தராளத்தில் நாம் என்ன செய்யக்கூடும்.

சார்ஜண்ட் ; ஒவ்வொரு மாகாணத்திலும் 2 லக்ஷம் ஜனங்களுள்ள ஒரு பிராந்தியத்தை எடுத்துக்கொண்டு ஐந்துவருஷ திட்டமொன்றை அங்கு அமுலுக்குக் கொண்டுவர வேண்டும். அடுத்த ஐந்து வருஷத்தில் மற்றொரு தொகுதியில் அதை அமுலுக்குக் கொண்டுவரவேண்டும். இவ்விதமாக அந்த மாகாணம் பூராவிலும் கல்வி திட்டம் அமுலுக்கு வரும். இவ்விதமாகத்தான் இந்த பிரச்னையைத் தீர்த்து போதுமான உபாத்தியாயர்களைத் தேர்ந்தெடுக்கமுடியும்.

ஸ்டீட் : நம்முடைய சர்ச்சையின் முடிவுகளை சுருங்கச் சொல்லுவீர்களா.

உட் : குழந்தைகளின் சந்தோஷத்துக்கும், க்ஷேமத்திற்கும், சுகாதாரமும் உணவுப்பொருள்களும் அவசியம். அவைகள் கல்விக்கும் முக்கியமுள்ளவை. ஏனெனில் பட்டினி கிடக்கும் குழந்தைகளுக்குக் கல்வி பயில்விக்க முடியாது. இரண்டாவதாக, இந்தியாவின் மேன்மை இந்தியர்களின் கல்விப் பயிற்சியைப் பொறுத்தது. இந்தியாவின் கல்வி முறை நம்முடைய முறையைப் பின்பற்றி இருக்கிறது. நமது கல்வியிலுள்ள சில பிற்போக்குகளை அது கற்றுக்கொண்டுவிட்டது. அதாவது ஏராளமான பரீக்ஷைகளை வைப்பதென்பது. இந்த குறையை நீக்க நாம் முயன்று வருகிறோம்.
இந்த நிலைமையை சமாளிக்க, இப்பொழுதுள்ள வியர்த்தமான படிப்புக்குப் பதிலாக, சுறு சுறுப்பான, உயர்ந்த, கல்வியை ஏற்பாடு செய்யவேண்டும். அதாவது கல்வி என்பது உத்தியோகத்துக்காக என்றில்லாமல் நடை முறையில் பிள்ளைகளுக்கு உபயோகப்படக்கூடியதாக இருக்கவேண்டும்.

பம்பாய் தங்கம் வெள்ளிக்கட்டி விலையில் இரக்கம்.

(**ஆஸ்கார் R. ஹாப்ஸன்**, நியூஸ் கிரானிகிளின் பம்பாய் பத்திரிகாசிரியர்).

பொன் மூலாம் மார்க்கெட்டுக்குப் பொருள் மிகுதியாக வந்துகொண்டிருப்பதிலிருந்து ஐரோப்பாவின் விடுதலை துரிதமாக நடைபெற்று வந்தபோதிலும், யுத்தம் எதிர்பார்த்த தேதிக்குப் பின்னும் நீடித்து நடக்குமென்பதை பொருளீட்டுகிறவர்கள் ஒப்புக்கொண்டு விட்டார்களென்று தெரியவருகிறது.

பிரதம மந்திரி சமீபத்தில் வெளியிட்ட தாதுபுஷ்டி அறிக்கை மூலமாகவும் இந்த மனப்பான்மை மாறிவிடவில்லை.

யுத்தம் நீடித்து நடக்குமென்பதை எதிர்பார்த்து தோன்றும் பொருளாதார நிலைமையுடன், பம்பாய் தங்கம், வெள்ளிக்கட்டி விற்பனை மார்க்கெட்டின் தோற்றத்தை ஒப்பிட்டுப் பார்ப்போம். கொஞ்ச காலமாக பம்பாயிலுள்ள தங்கம், வெள்ளியின் விலை குறைந்து கொண்டேவருகிறது. சென்ற ஏப்ரல் மாதத்தில் தங்கம் தோலா ரூ 77 வீதம் விற்றது. அதாவது ஒரு அவுன்ஸ் தங்கம் £ 15—10—0-க்கு சமானமாகும். அக்டோபர் 27-ம் தேதி அன்று தோலா ரூ 63 வீதம் விற்றது. அதற்கு முதல் நாள் அது ரூ 61-க்கு விற்றது.

வெள்ளியின் விலையும் சென்ற ஏப்ரல் மாதத்தில் 100 தோலா ரூ 143 விற்றதுபோக, அக்டோபர் 27-ம் தேதியன்று ரூ 116—8—0-க்குக் குறைந்துவிட்டது.

விலைகள் குறைந்ததற்கு பிரிடனும், அமெரிக்காவும் ஏராளமான தங்கம், வெள்ளியை விலைக்கு விற்று, இந்திய வியவசாயிகளை தானியங்களை சேமித்து வைக்காமல் தூண்ட முயற்சி செய்ததுதான் காரணமாகும். இந்திய விவசாயிகள் தங்கம், வெள்ளிக்கு தானியங்களை விற்கிறார்களே ஒழிய காகிதச் செலாவணியை ஒப்புக்கொள்ள மறுக்கிறார்கள்.

விலைவாசிகளிறங்கியதற்கு யுத்தம் கூடிய சீக்கிரத்தில் முடிந்துவிடுமென்று எதிர்பார்ப்பதுதான் முக்கிய காரணமாகும். இந்தக் குறைந்த விலையும் இந்தியாவில் தங்கம் வெள்ளி விலை அமெரிக்க டாலர் பிரிடிஷ் ஸ்டர்லிங்க் இவைகளின் விலை மதிப்புக்கு அதிகமாகவே இருக்கிறது.

யுத்தம் முடிந்தபின் தங்கமும், வெள்ளியும் ஒரு தேசத்திலிருந்து மற்றொரு தேசத்துக்கு தாராளமாக முன்போல் அனுப்பப்படக்கூடும். இது சம்பவிக்கும்பொழுது இந்தியாவில் தங்கம், வெள்ளியின் விலக்கும் மற்ற நாடுகளிலுள்ள பெருமதிக்குமுள்ள வித்தியாசம்போய் விடும். உலகத்திலுள்ள மார்க்கெட்டுகள் துணிக்கப்பட்டுவிட்டதால் இந்த விலைபொருள்கள் வெவ்வேறு தேசங்களில் வெவ்வேறு விலையாக விற்கின்றன. அவைகள் ஒழுங்குபடும் வேலை நடைபெற்றுவருகிறது. யுத்தத்தின் முடிவு சமீபிக்கும்பொழுது இந்த வேலையும் துரிதப்படும்.

'வி' டயரி-1945.

(குறிப்பு புஸ்தகம்).

லினன் ரூ. 1—8—0; ஷீப்ஸ்கின் ரூ. 1—12—0; மொராக்கோ ரூ. 2—4—0.

தபால் செலவு (பிரத்தியேகம்):—ரிஜிஸ்தர் புக் போஸ்ட்டில்
முதல் காபிக்கு ரூ. 0—4—3
அத்துடன் சேர்த்து அனுப்பும் ஒவ்வொரு காபிக்கும் ஒவ்வொரு அணா.

காபிகளுக்குமுந்துங்கள்! **22-11-44** முதல் ஸ்டேட் அச்சாபீஸில் விற்பனைக்குக் கிடைக்கும்.

கீழ்க் கண்ட விலாசத்திலிருந்து வாங்கிக்கொள்ளலாம்:—

காரியதரிசி,
தேசிய யுத்த முன்னணி நிலயம்,
புதுக்கோட்டை (தென் இந்தியா).

பிரகிருத யுத்தத்தில் அயல் நாடுகளில் சேவை புரிந்துவரும் இந்திய துருப்புகளுக்கு பொழுது போக்காய் படிக்கக்கூடிய தமிழ் புஸ்தகங்கள் தேவை. தகுதியான பழைய புஸ்தகங்களை இனாமாகக் கொடுக்கும்படியாக பொதுஜனங்களை கேட்டுக்கொள்ளுகிறோம்.

அவைகளை ஸ்டேட் அச்சாபீஸ் சூபரின்டென்டெண்ட் அவர்களுக்கனுப்ப வேண்டும். அவர் அவைகளைச் சேரவேண்டிய இடத்துக்கு அனுப்பிவிடுவார்.

புதுக்கோட்டை ஸமஸ்தான தேசிய யுத்த முன்னணி நிலயத்தின் பிரஸங்க நிகழ்ச்சி முறை.

பிரஸங்கம் 224. (4-வது பிரிவு).

18-11-44	முனிஸிபல் ஆபீஸ் ...	மாலை	6.00
19-11-44	கீர்ப்பழனி ...	,,	7.00
,,	ஆலூர் ...	,,	7.30
20-11-44	புத்தாம்பூர் ...	,,	7.00
,,	வைத்திக்கோவில் ...	,,	7.30
21-11-44	நார்த்தாமலை ...	,,	7.00
,,	உப்பிலியக்குடி ...	,,	7.30
22-11-44	காலேஜ் A இங்கிலீஷ் ...	காலை	11.00
,,	காலேஜ் B தமிழ் ...	,,	11.00
22-11-44	C. S. M. பள்ளிக்கூடம் ...	காலை	10.00
,,	ராணி பெண் பாடசாலை ...	,,	10.45
,,	வடவாளம் ...	மாலை	7.00
,,	சம்மட்டிவிடுதி ...	,,	7.30
23-11-44	நல்லூர் ...	,,	7.00
,,	மாத்தூர் ...	,,	7.30
24-11-44	நச்சாந்துபட்டி ...	,,	7.00
,,	விராச்சிலை ...	,,	7.30

பிரஸங்கம் 225. (5-வது பிரிவு).

25-11-44	முனிஸிபல் ஆபீஸ் ...	மாலை	7.00
26-11-44	ஆலங்குடி ...	,,	7.00
,,	ராசியமங்கலம் ...	,,	7.30
27-11-44	திருமெய்யம் ...	,,	7.00
,,	மேலூர் ...	,,	7.30
28-11-44	பள்ளிவாசல் ...	,,	7.00
,,	கில்லமங்கலம் ...	,,	7.30
29-11-44	புலியூர் ...	மாலை	7.00
,,	கண்ணங்குடி ...	,,	7.00
30-11-44	அன்னவாசல் ...	,,	7.30
,,	கீழக்குறிச்சி ...	,,	7.00
1-12-44	கீழாநிலை-புதுப்பட்டி ...	,,	7.30
,,	கீழாநிலைக்கோட்டை ...	,,	7.30

யுத்தத்திற்கு ஆள் சேர்த்தல்—விளம்பரம்—மாலை 4-மணி.

18—11—44	திருமெய்யம்.
19—11—44	மருதன்கோன்விடுதி.
21—11—44	ராமச்சந்திரபுரம்.
23—11—44	கிழாநிலை.
24—11—44	புதுக்கோட்டை.
25—11—44	பொன்னமராவதி.
26—11—44	ஏம்பல்.
28—11—44	விராச்சிலை.
30—11—44	கீழாநிலை.
1—12—44	புதுக்கோட்டை.

Sri Brihadamba State Press, Pudukkottai. 1,750—22-11-44.